ISSN 2012 - 6700

இதழ் - 18

# பூங்காவனம்

கலை இலக்கிய சமூக சஞ்சிகை



திருமதி. சுகந்தி இராஜகுலேந்திரா

பூங்காவனம் இலக்கிய வட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REGISTERED WEB NEWS PORTAL

# Daily Ceylon

WE REPORT TRUTH



*What's Up Now Click On :*

## www.dailyceylon.com

Local News | World News | Sport News | Articles | Politics | Technology

- ON TIME VIDEO NEWS -

e-mail : info@dailyceylon.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூங்காவனம்

தோற்றம் - 2010 மே 30
இதழ் 18 - 2014 செப்டெம்பர்
ISSN 2012 - 6700

பிரதம ஆசிரியர்

ரிம்ஸா முஹம்மத்

துணை ஆசிரியர்கள்

எச்.எப். ரிஸ்னா
டப்ளியு.எம். வஸீர்

ஆலோசகர்

ஏ.சீ. ஜரீனா முஸ்தபா

வங்கித் தொடர்புகளுக்கு

Commercial Bank,
Mount Lavinia Branch,
M.F. Rimza
A/C No :- 8930020237.

என்ற இலக்கத்திற்கு காசை வைப்பிலிட்டு அதன் பற்றுச்சீட்டை அனுப்ப வேண்டும். காசுக் கட்டளையாயின் (M.F. Rimza - Dehiwala Post Office) என்று குறிப்பிட்டு அதற்கான பற்றுச் சீட்டையும் அனுப்ப வேண்டும். காசோலையாயின் குறுக்குக்கோடு இடப்படாத காசோலையை M.F. Rimza எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

தனிப்பிரதி - 100/=
தபால் மூலம் - 140/=
வருட சந்தா - 600/=

தொடர்புகளுக்கு

"Poongavanam"
21 E, Sri Dharmapala Road,
Mount Lavinia,
Sri Lanka.

**Email:-**
poongavanam100@gmail.com

**Website:-**
www.poongavanam100.blogspot.com

**Phone:-**
0094 (0) 775009222
0094 (0) 719200580

புதிய ஆக்கங்களும், இச்சஞ்சிகை பற்றிய விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனத்துக்கு அனுப்புபவர்கள் நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும்.

படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப்படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுடன் ஒரு நிமிடம்...

பூங்காவனம் இதழ் 18 இனூடாக வாசகர்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. பல தடைகளைத் தாண்டி தொடர்ந்தும் பூங்காவனம் சஞ்சிகை வெளிவர உதவிபுரியும் வல்ல இறைவனுக்கும், விளம்பரதாரர்களுக்கும், வாசகர்களுக்கும் எமது நன்றிகள் என்றென்றும் உரித்தாகட்டும்.

தாய், தந்தை, குடும்பத்தை விட்டு பாடசாலைக்கு புறப்படும் ஒரு பிள்ளை பெற்றோர்களுக்கு அடுத்ததாக ஆசிரியர்களையே நம்புகின்றது. ஒரு பிள்ளையின் சகல முன்னேற்றங்களிலும் அக்கறை காட்ட வேண்டியது ஆசிரியரின் கடமையாக மாறிவிடுகின்றது.

'எது விதைக்கப்படுகிறதோ அதுவே அறுவடையாகும்' என்பதற்கேற்ப பாடசாலையில் பிள்ளைகள் பெறும் கல்வியானது, அவர்களின் வாழ்க்கையையே தீர்மானிக்கின்றது. ஆசிரியர்களின் பங்களிப்பு அதில் மிகவும் அளப்பரியது.

ஒருவரும் இலட்சியமே இல்லாமல் வாழ முடியாது. ஒருவனின் திறமை என்னவென்பதைக் கண்டறிந்து அவனது வாழ்க்கையைத் தீர்மானிக்க ஆசிரியர்களும் உதவுகின்றனர். ஒரு மாணவனது ஆளுமைக்கும் திறமைக்கும் ஏற்ற வகையில் அவனது முன்னேற்றதில் அக்கறை கொள்ளும் கலங்கரை விளக்காக ஆசிரியர்களே செயற்படுகின்றனர். இத்தகைய ஆசிரியர்களின் சேவையை உலகமே மதிக்க வேண்டும் என்பதற்காக ஒக்டோபர் 05 ஆம் திகதி சர்வதேச ஆசிரியர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆசிரியர்கள் தமது சொந்தப் பிள்ளைகளாகவே மாணவர்களையும் கருதுகின்றார்கள். பாகுபாடின்றி, வேறுபாடின்றி அனைத்து மாணவர்களையும் மிகவும் அன்போடு கவனித்துக்கொள்கின்றார்கள்.

தாம் அருகில் இல்லாதபோதும் சுமார் ஆறு மணித்தியாலங்கள் பிள்ளைகளை விட்டுவிட்டு பெற்றோர்கள் நிம்மதியாக இருக்கக் காரணம், ஆசிரியர்கள் தம் பிள்ளைகளை மிகவும் கவனமாகப் பார்த்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையினால் ஆகும். ஆசிரியர்கள் வஞ்சகமின்றி பாடங்களை நடத்துவார்கள் என்று சமூகம் எதிர்பார்ப்பது, எதிர்காலத்தில் புத்திஜீவிகளையுடைய சமுதாயமொன்றை ஆசிரியர்கள் உருவாக்குவார்கள் என்ற எதிர்பார்ப்பிலாகும்.

ஆசிரியர்களின் சேவை பெற்றோரின் அன்புக்கு ஒப்பானது. எனவே ஆசிரியர்களை மாணவர்கள் மிகவும் மதித்து செயற்பட வேண்டும் என்பதுபோலவே, ஆசிரியர்களும் தத்தமது நிலைப்பாட்டிலிருந்து வழுவாமல் மாணவர்களை பாதுகாக்கவும் வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்!!!

ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூங்காவிருள்ளே


## நேர்காணல்

திருமதி. சுகந்தி இராஜகுலேந்திரா

## கவிதைகள்

உ... நிசார்
த. ஜெயசீலன்
ச. முருகானந்தன்
மருதூர் ஜமால்தீன்
ஆர். சதாத்
எம்.எம். அலி அக்பர்
பதுளை பாஹிரா
பி.ரி. அஸீஸ்
எம்.எஸ்.எம். சப்ரி
வவுனியா சுகந்தினி
வெலிப்பன்னை அத்தாஸ்

## சிறுகதைகள்

இக்ராம் எம். தாஹா
எஸ்.ஆர். பாலசந்திரன்
சூசை எட்வேட்

## குறுங்கதை

ஜனீரா ஹைருல் அமான்

## கட்டுரைகள்

கவிஞர் ஏ. இக்பால்
கா. விசயரத்தினம்

## நூல் மதிப்புரை

நிலாக்குயில்

## வாசகர் கடிதம்

## நூலகப்பூங்கா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேர்காணல்

## திருமதி. சுகந்தி இராஜகுலேந்திரா

சந்திப்பு
ரிம்ஸா முஹம்மத்

01. உங்கள் பிறந்த இடம், கல்லூரி வாழ்க்கை பற்றிக் குறிப்பிடுங்கள்?

நான் வடமராட்சி பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவள். பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் கல்வி கற்றேன். பாடசாலைக் காலங்களில் நடனம், நாடகம், விளையாட்டு, பேச்சு, கவிதை என பல துறைகளிலும் பங்களிப்புச் செய்தேன்.



02. உங்கள் குடும்பத்தைப் பற்றிக் கூறுங்கள்?

எனது குடும்பம் ஒரு கூட்டுக் குடும்பம். எனது கணவர், இரண்டு பெண் பிள்ளைகள் நான் மற்றும் உறவினர்கள் சேர்ந்ததே என் குடும்பம்.

03. உங்கள் குடும்பத்தினருக்கும் கலைத் துறையில் ஈடுபாடு உண்டா?

எனது கணவர், மகள்மார் இருவர், நான் நால்வருமே கலைத்துறையில் ஈடுபாடு கொண்டவர்கள்தாம். எனது கணவர் நாடகத்துறையில் பங்குகொண்டு மேடை நாடகங்களில் நடித்தவர். அதேபோன்று மகள்மார் இருவருமே வீணை வாசிப்பதிலும் பரத நாட்டியத்திலும் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். நானும் கல்லூரிக் காலத்தில் பல ஆங்கில நாடகங்களில் நடித்து, பரிசும் பெற்றிருக்கிறேன். மேலும் சில மேலைத்தேய இசைக்கருவிகள் இசைக்கும் பயிற்சியும் உண்டு. அந்த ஈடுபாடு தான் என்னால் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் நுண்கலைக்குழுச் செயலாளராக இருந்து சிறப்பான இசை விழா ஒன்றை நடத்த உந்து சக்தியாக அமைந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. உங்களது இலக்கியத் துறை ஈடுபாடுகள் பற்றி விளக்கமாகக் கூறுவீர்களா?

எனது இலக்கியத்துறை ஈடுபாட்டைச் சொல்வதானால் இயல்பாகவே என்னிடம் இலக்கிய ஆர்வம் இருக்கிறது. அவ்வார்வத்தை ஈடுபாடாக மாற்ற துணை இருந்தது எனது கணவரின் அதீத இலக்கிய ஈடுபாடும் இலக்கியத்தேடலும் தான். எனது தொழிற்துறை வேலைப்பளுவால் நான் சோர்ந்து போகும்போதெல்லாம் இலக்கியத்தேடலும் இரசனையும் தான் என்னைப் புத்துணர்வு பெறச்செய்கின்றன. எனது வீட்டில் இருக்கும் ஏறத்தாழ ஐயாயிரம் பல்துறை நூல்களைக் கொண்ட நூலகம் துணையாக இருக்கிறது.

05. இலக்கிய உலகில் மறக்க முடியாதவர்கள் யாராவது உண்டா?

இலக்கிய உலகில் மறக்க முடியாதவர்கள் யாராவது உண்டா என்றால் எல்லோருமே மறக்க முடியாதவர்கள் தான். மனிதன் இதயம் என்றும் மாசுபடாதிருக்க உள்ளத்துக் கறைகளைக் களையும் வண்ணம் இலக்கியம் படைத்தோரெல்லாம் மறக்க முடியாத மாணிக்கங்கள்தான்.

06. எப்படி சட்டத் துறைக்குள் வந்தீர்கள்? அதற்கான காரணகர்த்தா யார்?

பாடசாலைக்காலத்தில் உயர்தரக்கல்வி பயின்று கொண்டிருக்கும் போதே சட்டத்துறையில் நுழைய வேண்டுமென்ற வேட்கை இருந்தது. அவ்விருப்பம் அவ்வேளை நிறைவேறவில்லை. ஆசிரியப் பணியில் இணைந்து சிலகாலம் கடமையாற்றினேன். ஆயினும் எனது சட்டத்துறை வேட்கை தணலாகவே இருந்தது. அதனை கொழுந்து விட்டெரியும் தீயாக என்னால் மாற்ற முடிந்தது எனது திருமணத்தின் பின்னர்தான். இரு குழந்தைகளுக்குத் தாயான பின்னர் சட்டம் பயின்று சட்டத்தரணியானேன்.

07. சட்டத் தொழில், இலக்கிய நிகழ்வுகளில் ஈடுபாடு, எழுத்தாற்றல், நல்ல பேச்சாற்றல் நிறைந்த உங்களுடைய வாழ்க்கை அனுபவங்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்?

வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும் வாசல் தோறும் வேதனை இருக்கும் என்ற திரைப்பாடல் வரிகளுக்கொப்ப பல்வேறுபட்ட இன்பமான தளர்வான இரண்டும் கலந்த மனநிலைகளைத் தோற்றுவித்த அனுபவங்கள் நிறையவே உண்டு. சட்டத்தொழில் சமூகத்துக்குப் பணியாற்ற வாய்ப்புத் தந்தாலும் அவ்வப்போது மனச்சோர்வு தரும். அவ்வேளைகளில் என் சோர்வைப் போக்கி எழுச்சி தருவது இலக்கிய நிகழ்வுகளில் எனது ஈடுபாடுதான். சட்டத்தரணி ஒருவரின் மூலதனமே பேச்சாற்றல் தான். இப்பேச்சாற்றல் பள்ளிக்காலத்தில் இருந்து எனது அன்னையாரின் தூண்டுதலால் எனக்கு வாய்க்கப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



08. உங்கள் ஆக்கங்கள் மேடைப் பேச்சுக்களாக மாத்திரம் அமைந்ததா? அவற்றை நூலுருவாக்கும் எண்ணம் உண்டா?

மேடைப் பேச்சுக்களை நூலுருவில் கொண்டுவர மிகுந்த ஆசை. ஆயினும் செயற்படுத்துவதில் இருக்கும் சிக்கலால் தள்ளிக்கொண்டே போகிறது.

09. உங்கள் நினைவில் நீங்காத சம்பவம் இருப்பின் குறிப்பிடுங்கள்?

சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்ததைக் கூறலாம்.

10. உங்கள் ஓய்வு நேரங்களில் எவ்வகையான புத்தகங்களை அல்லது யாருடைய புத்தகங்களை நீங்கள் அதிகமாக வாசிக்கிறீர்கள்? காரணம் என்ன?

ஓய்வு நேரங்கள் என்பதைவிட எனது சட்டத்தொழிற் கடமைகள் முடிவடைந்து மீதியாக இருக்கும் நேரங்கள் என்பதே பொருத்தமானதாயிருக்கும். அவ்வேளைகளில் பழந்தமிழ் இலக்கியங்கள் குறித்த புதிய சிந்தனை எழுத்தாளர்களின் படைப்புக்கள், டாக்டர் சாலினி, ஆண்டாள் பிரியதர்சினி, பிரேமா போன்ற எழுத்தாளர்களின் படைப்புக்கள் எஸ். இராமகிருஷ்ணனின் கட்டுரை நூல்கள் என்பவற்றை ஆர்வத்துடன் வாசிப்பதுண்டு.

11. இலக்கிய படைப்பில் கவிதை, சிறுகதை, நாவல், விமர்சனம், கட்டுரை இவற்றுள் அதிக ஆர்வத்துடன் நோக்குவது எதை? ஏன்?

கவிதைகளையும் கட்டுரைகளையும் ஆர்வத்துடன் நோக்குவேன். ஏனெனில் கவிதைகள் தெளிவான ஆழமான சொற்செட்டோடு அமைவதனாலும் கட்டுரைகள் பல நூறு அறிஞர்களின் கருத்துக்களை உசாத்துணை கொண்டு எழுதப்படுவதாலும் நான் விரும்பிப் படிக்கிறேன்.

12. சட்டத் துறையில் கல்வி கற்கும் இளையவர்களுக்கு நீங்கள் கூறும் ஆலோசனை என்ன?

சட்டத்துறை என்பது ஒரு மனிதனின் அறிவு விரிவாக்கத்துக்குப் பெருந்துணையாக அமைவது. சமுதாயத்தில் இரண்டு வர்க்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதாய் கருதுபவள் நான். ஒன்று ஏமாற்றும் வர்க்கம் மற்றையது ஏமாறும் வர்க்கம். சட்டம் ஏமாறும் வர்க்கத்துக்கு தடுப்பு வேலியாகவும் ஏமாற்றும் வர்க்கத்துக்கு எரியூட்டும் தீயாகவும் இருப்பது. சட்டத்துறையில் கல்வி கற்கும் இளைஞர்கள் தமது துறையை வெறுமனே வருவாய்த் துறையாக எண்ணாமல் தம் கூரிய அறிவு மேலும் கூர்மையாக, அறிவை மேம்படுத்திக் கொண்டு சமூக அக்கறையோடு பணியாற்ற முனைதல் வேண்டும். அவர்தம் உழைப்பு வாழ்வில் உறுதியை நல்கும் என்பது திடம்.

13. உங்களுக்குக் கிடைத்த பரிசுகள், பாராட்டுக்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்?

பாடசாலைக் காலங்களில் அகில இலங்கை ரீதியாக நடந்த பேச்சுப் போட்டிகளில் தங்கப் பதக்கமும் நாடகத்தில் சிறந்த நடிகைக்கான பரிசும் கிடைத்தது.

14. சட்டம், இலக்கியம் தவிர்த்து வேறு என்ன துறைகளில் உங்களுக்கு ஈடுபாடு உண்டா?

இசை, நடனம் என்பவற்றிலும் ஈடுபாடுண்டு.

15. புத்தகம், இணையம், பேஸ்புக் என்பன இலக்கியத்தை எவ்விதம் வளர்க்கின்றன?

இவை மூன்றுமே இலக்கியப் பங்களிப்பைச் செய்கின்றன என்றால் அது மிகையல்ல. புத்தகம் வெளியிடுவதில் சிக்கல்களை எதிர்கொள்வோர் இணையம் முகநூல் வழி இலகுவாக பலநூற்றுக்கணக்கான வாசகர்களை தம்வசம் கொண்டுள்ளனர். உடனடியாகவே அவர்களின் ஆக்கங்களுக்கான விமர்சனத்தையும் அவர்களால் இதன்வழி பெற்றுக்கொள்ள முடிகிறது.

16. தற்காலத்தில் இலக்கிய வளர்ச்சி எந்த அளவில் இருக்கின்றது என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?

நான் ஒன்றும் இலக்கிய விற்பன்னம் படைத்தவளல்ல. ஆனால் வளர்ந்துள்ளது என்று மட்டும் சொல்ல முடியும்.

17. இலக்கிய உலகில் காலடி எடுத்து வைக்கும் புதிய எழுத்தாளர்கள் பற்றி அல்லது எழுத்தாளர்களுக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

சமூக அக்கறையோடு எழுதுங்கள்.

18. தலைநகரில் இன்று நிறையவே நூல் வெளியீடுகள் நடைபெறுகின்றன. இது குறித்த உங்கள் கருத்து என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவகையில் ஆரோக்கியமாக இருந்தாலும் அனைத்து நூல்களும் சமூகத்துக்குப் பயனுள்ளனவா என்ற வினாவும் எழாமல் இல்லை.

19. ஆண், பெண் ஒழுக்க விழுமியத்தை இலக்கியம் மூலம் எப்படி கட்டிக்காக்கலாம்?

உலகம் தழுவிய அமைதிக்கும் இன்பத்துக்கும் ஒழுக்க விழுமியங்களே அச்சாணியாக அமைகின்றன. இன்றைய பல இலக்கியங்கள் ஒழுக்க விழுமியத்தை வெளிப்படுத்துவதில் மெத்தனப் போக்கையே கையாள்கின்றன. யதார்த்தம் நடைமுறை என்ற சொற்பதங்கள் மூலம் விழுமியங்களின் வீரியம் நீர்க்கச் செய்யப்படுகிறது. எனவே மனித ஒழுக்க விழுமியம் குறித்து இலக்கியங்கள் வரையறை செய்து வரம்புகளிடுதல் அவசியம். இச்செயற்பாடுகள் மூலம் மாந்தரின் ஒழுக்க விழுமியங்கள் கட்டிக் காக்கப்படலாம்.

20. இறுதியாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே!!!

# நம்பிக்கைகள்

குழந்தைகள் இல்லாத வீட்டில்
குழவியொன்று வந்து கூடு கட்ட
மாமியாரின் உள்ளம் மகிழ்ந்தது
அதனால்
மருமகளுக்கெதிரான
வன்முறைகளும்
ஓய்ந்துவிட்டன..

மாமியாரின் திடீர் மாற்றம்
மருமகளுக்குப் புரியாத நிலையில்
நாட்கள் சுழன்றன..

மாமியாரின் எதிர்பார்ப்புக்கள் தொடர
மருமகள் மலடியாகவே இருந்தாள்..

ஒருநாள்
குழவி வந்து
கூட்டில் குடியமர்ந்து
தனியாகவே இருந்தது...

இதைக் கண்டு
சாத்திரங்கள் பொய்யாகாதென
தனக்குள் சொல்லிக் கொண்டு
மீண்டும் தொடராமலிருந்தன
மருமகளுக்கெதிரான
மாமியாரின்
வன்முறைகள்!!!

● உ. நிசார் - மாவனெல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதும் உயரம்

விரிந்து கிளைபரப்பி
வேர்விழுதும் முறுகி நிற்கும்
விருட்ச அடியிருந்து
விறுவிறு என்று ஏறிவந்தேன்..

பெருத்துத் திரண்ட அடித்தண்டில்
கால்வைத்து
விரைவாக ஏற முடியாது ஓரிரண்டு
முறை சறுக்கி முக்கி முயன்றேறி
முதற்கிளையில்
கால் பதித்தேன்!

பின்பு ஏற்றம் இலகுவாச்சு..
மேலே கிளைகள் மிகுந்து
திடீர் திடீரென்று
ஏறிச் சடைத்துக் கிடந்தது..

இலகுவாகக் காலூன்றிக்
கடகடென்று கிளை கடந்து
விருட்சத்தின் உச்சக்கொம்படைந்து
ஒருமுறை கீழே பார்த்தேன் நான்..

பருந்தொன்றின் பார்வையாக
எண்திசையும் என்பார்வைப்
புலத்துள் சிறைப்பட்டென்
காலடியில் வீழ்ந்திற்று!

என்னோடு நின்றவர்கள்
இப்போ குறுணிகளாய்
என்கீழ்க் கிடந்தார்கள்!

அவர் என்னை வியந்து பார்க்க
என்கிறுக்கும் எகிறிற்று!

நேற்றுவரை எனக்கெட்டா
எண்ணற்ற பூ,
பழங்கள் என்கைக்குள் ஆடிற்று!
என் கன்னம் வருடிக்
காற்றுவந்து கொஞ்சிற்று!

எண்ணற்ற பறவைகள்
எனக்கு மிகஅ ருகே
வந்து வந்து போயின..

வாண்டு சிறுவரெல்லாம்
என்னைக் கழுத்து நோகப்
பார்த்தயர்ந்தார்!

அவ்விருட்சம்
சிம்மாசனமொன்றாய்
எனை உயர்த்த
உச்சத்தில்
ஊசலாடும் நுனிக் கிளையில்
உயர்ந்து நின்ற வேளையிற்தான்
இந்த உயரமே போதுமென்ற
உள்ளுணர்வு
என்னுள் கிளம்பிற்று..

என்முயற்சி பலிதமாகி
இந்த வரம், இடமே
கிடைத்ததென்றும்
இதற்குமேலும்
போக முயன்றால்
என்னாகும் என்பதுவும்
ஊறிற்று விசம் போலே!

ஊஞ்சலாடும் கிளை தன்னைக்
கவனமாகப் பற்றி
கவனமாகக் கால் வைத்து
இறங்குகிறேன்..
எனைக் காத்ததெது?
அதற்கு நன்றி சொல்வேன்!!!

த. ஜெயசீலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி

## சிறுகதை

● கினியம இக்ராம் எம். தாஹா

மாணவன் சபீரின் இனிய கிராத்துடன் இனிதே ஆரம்பமானது அன்றைய வார இறுதி காலைக்கூட்டம். வெள்ளை நிற சீருடையில் மாணவர்கள் அழகாய் அணிவகுத்து நிற்க, ஆசிரியர்கள் புடைசூழ தேசிய கீதம், பாடசாலை கீதம் முடிந்ததும் அதிபர் தன் உரையைத் தொடங்கினார்.

அவர் உரையில், 'அன்பார்ந்த மாணவர்களே.. இன்றைய நாள் நம் பாடசாலைக்கு சந்தோசமான நன்நாள். நேற்றைக்கு முன்னை நாள் புதன்கிழமை 1992 இந்த ஆண்டிற்கான எமது மாகாணத்திற்கான தமிழ் தினவிழாப்போட்டி நடைபெற்றமை நாம் எல்லோரும் அறிந்த விடயம். இந்த முறை எமது பாடசாலையில் வலய மட்டத்தில் முதலிடம் பெற்ற 08 மாணவ, மாணவிகள் மாகாண போட்டியில் கலந்துகொள்வதற்காக சென்றார்கள். அவர்களில் ஒருவரைத்தவிர மற்ற ஏழுபேர் முதலாமிடத்தை பெறாத போதிலும் இரண்டாம், மூன்றாம் இடத்தைப்பெற்று நமக்கு பெருமை சேர்த்துள்ளனர். அவர்களை பாராட்டுகிறேன்'.

மாணவர்களை அழைத்து வரிசையில் நிறுத்தி அவர்களை வாழ்த்த சக மாணவகள் கைதட்டி தமது பாராட்டைத் தெரிவித்தனர். அப்போது அந்த மாணவர்களுக்குள் காமிலும் தன் கைகளைத்தட்டி தன் பாராட்டைத் தெரிவித்தான். ஆனால் அவன் கண்களிலிருந்து கண்ணீர் வெள்ளமாய் வடிந்து கொண்டிருந்தது. ஏன்.. அவன் தான் மாகணப் போட்டியில் பங்கெடுத்தும் வெற்றியீட்டாத மாணவன். நம்பிக்கையுடன் போட்டியிட்ட அவன் தோல்வியைத் தழுவியது அவனுக்கு ஏதோ தாங்கமுடியவில்லை.

இதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர்... 'பாடசாலை மட்டத்திலான தமிழ் தின விழாப்போட்டி இன்னும் இரண்டு கிழமையில் நடைபெறும் போட்டிகளில் பங்கு பற்ற விருப்பமானவர்கள் தமது பெயர்களை இன்றும் நாளையும் பதிவு செய்துகொள்ளலாம். அகில இலங்கை ரீதியில் வெற்றி பெறுகிறவர்களுக்கு தங்கப் பதக்கம் கிடைக்கும்' என்று தமிழ் பாட ஆசிரியை மூலம் அறிவிக்கப்பட்டது. காமில் ஆண்டு 09 படிக்கும் மாணவன். அழகாய் எழுதுவான். பல கட்டுரைகள் எழுதிருக்கிறான். ஆனால் இது வரை சிறுகதை எழுதியதில்லை. ஆயினும் சிறுகதைப் போட்டியில் தான் போட்டியிடவேண்டும் என்று அவன் மனசு சொல்லியது. இறுதியில் சிறுகதைப் பிரிவில் போட்டியிட தனது பெயரைப் பதிவு செய்து கொண்டான். போட்டிக்கான மூன்று தலைப்புக்கள் வழங்கப்பட்டன.

அன்று வீட்டிற்குச் சென்றவன் எப்படி சிறுகதை எழுதுவது என்று அம்மா, அப்பா, சகோதர, சகோதரிகள் எல்லோரிடமும் கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நாங்களும் சிறுகதை எழுதிய அனுபவம் இல்ல. பேப்பர்ல உள்ள கதைகள வாசிச்சு பார்த்தா விளங்கும். சேர்கிட்டயும் கொஞ்சம் கேட்டு பார்த்தா சொல்லித்தருவாரு' என்று வீட்டார் அறிவுரை வழங்கினர்.

அன்று பழைய பேப்பர்களை எடுத்தான். சில சிறுகதைகளை வாசித்தான். அப்படியே உறங்கிவிட்டான்.

மறுநாள் தமிழ் ஆசிரியரிடம் சென்று, 'எப்படி சிறுகதை எழுதுறது' என்று கேட்டான.' 'அது உன் கிட்ட இருந்து சுயமா வரனும். பழைய தமிழ் மலர்னு புக் ஒன்னு இருக்கு. அதை தேடி கொஞ்சம் வாசித்துப்பாரு.. அது போல பேப்பர்ல வார கதைகளையும் வாசிச்சு பாரு அப்புறம் உன் கற்பனைல வாரத எழுது' என்றார். அவரின் அறிவுரைக்கு நன்றி கூறியவனாய் வீட்டிற்கு போனதும் எப்படியாவது தமிழ் மலர் புத்தகம் வேண்டுமென்று வீட்டில் ஒற்றைக்காலில் நின்றான். அது மிகவும் பழைய தமிழ்ப் புத்தகம். அவன் படிப்பிற்கு, வீட்டில் எல்லோரும் உறுதுணையாக நின்றார்கள். மறுநாள் எப்படியோ தமிழ் மலர் புத்தகம் அவன் கையில் தவழ்ந்தது.

அதைப் படித்தான். பல பேப்பர் சிறுகதைகளையும் படித்தான். தனிமையில் சிந்தித்தான். தான்.. கொஞ்சம் கொஞ்சமாய் எழுதினான். பல கொப்பித் தாள்கள் கிறுக்கிக் கிறுக்கி குப்பையில் வீசினான். தூங்கும் போதும் சிந்தித்தான். முடிந்து, மாலை வேளை மாடுகளை எடுத்துவர குளத்திற்கு போவான். நீர் அருந்திய மாடுகள் வரமறுத்து, அங்கே மீண்டும் புல் மேயத்துவங்கும். அப்போ அவன் வயல் வரம்பில் உட்கார்ந்து ஆகாயத்தில் சஞ்சரித்தவனாய் கற்பனைக் கதைகளைச் சிந்திப்பான். வீடு வந்ததும் எழுத்து வடிவம் கிடைத்தது. இறுதியில் போட்டியில் பங்கெடுத்தான். அவன் முதல் முயற்சி. முதல் போட்டி. பாடசாலை மட்டத்தில் முதலிடம் பெற்றான். சந்தோசத்தில் துள்ளிக்குதித்தான். அடுத்து நடந்த வலய மட்டத்திலும் முதலிடம் பெற்றான். அடுத்து மாகாண மட்டத்திற்கான போட்டி. அவனால் நம்ப முடியவில்லை. முதல் முயற்சி தொடர் வெற்றி. அன்றைய நாளும் வந்தது. பாடசாலையிலிருந்து சிறுகதை, பா ஓதல், கவிதை, திருக்குறள், பேச்சுப் போட்டி என்று மொத்தம் எட்டுப்பேர் ஆசிரியர்களுடன் மாகாண மட்டப் போட்டிக்காக புத்தளம் நோக்கி வேனில் பயணித்தான்.

புத்தளம் சாகிரா பல பாகங்களிலுமிருந்து வந்திருந்த போட்டியாளர்களினால் நிரம்பியிருந்தது. காலையிலே முதன் முதலாய் சிறுகதைப் போட்டி ஆரம்பமானது. அங்கே ஒரு கதை எழுதப்பட்டது. ஒரு பந்தியில் கதை நிறுத்தப்பட்டிருந்தது. அந்த இடத்திலிருந்து கதையை தொடர வேண்டும். காமில் தன் கற்பனைச் சிறகை விரித்தான். 05 நிமிடங்களில் கதையைத் தீர்மானித்தான். அழகாய் எழுதி முடித்தான். அடுத்து ஒவ்வொரு போட்டி நிகழ்ந்து முடிந்து கொண்டிருந்தது.

மாலை ஐந்து மணிமுதல் இடையிடையே போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டது. ஆறு மணியாகும் போது காமிலுடன் வந்த மாணவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி விபரம் அறிவிக்கப்பட்டு முடிந்திருந்தது. காமிலின் நிலை அறிய முடியவில்லை. ஆசிரியர்களும் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டனர். முடிவு கிடைக்கவில்லை. போட்டி முடிவுகள் தாமதமானால் பின்னர் தபாலில் அனுப்பப்படும் என்ற பதிலே கிடைத்தது. அந்தக் கால கட்டத்தில் கிராமப் புறங்களில் தொலைபேசி வசதிகள் இருக்கவில்லை. தபால் மூலமே தகவல்கள் பரிமாறப்பட்டன.

'முதலில் நடந்த போட்டி தன்னுடையது. முடிவு இல்லையென்றால் நிச்சயம் தான் தேர்வாகியிருக்க மாட்டேனோ?' என்று காமிலின் மனசு கவலையில் துவண்டது. இரவாகிவிட்டது. வீட்டிற்கு வேறு பயணிக்க வேண்டும். இறுதியில் எட்டு மணியளவில் புத்தளத்திலிருந்து ஊர் திரும்பினார்கள்.

00000000

ஒரு கிழமைக்கு பின்னர் வகுப்பில் இருந்த விஞ்ஞான ஆசிரியை, 'காமில்' என்று அழைத்தார்.

'என்ன டீச்சர்?

'ஒரு ஹெப்பி நிவுஸ்.. நீ தான் சிறுகதையில பர்ஸ்ட். அகில இலங்கை போட்டிக்கு போக ரெடியாகுங்க'

'என்ன டீச்சர் சொல்றீங்க..?'

'ஆமா காமில் எங்க அக்கா, புத்தளத்தில ஒரு ஒபீஸ்ல வேர்க் பண்ரா. புதன் கிழமை தானே போட்டி நடந்திச்சு. அடுத்த நாள், முதல் பிளேஸ் எடுத்தவர்களுக்கு மினிஸ்டர் வந்து செர்டிபிகட் கொடுத்தாம். பெரிய விழாவாம். அக்காவும் அந்த விழாவுக்கு போய் இருக்காங்க. அப்போ சிறுகதை பிரிவு 03 முதலாமிடம் காமில் என அறிவிப்பு செய்தாங்களாம்' என்று டீச்சர் சொல்ல அவனுக்கு வானில் பறப்பது போன்ற நிலை.

அதே நேரம் அதிபரும், தமிழ்பாட ஆசிரியரும் சிரித்துக்கொண்டு காமிலின் வகுப்பிற்கு வந்தார்கள்.

'எங்களுக்கு இப்போதான் தபாலில் காமிலின் சான்றிதழும், அகில இலங்கை ரீதியான போட்டிக்குப் போவதற்கான பத்திரமும் வந்திருக்கு. நாளைய காலைக் கூட்டத்தில் சான்றிதழைத் தர்றேன். அடுத்த போட்டிக்கு ரெடி தானே? பெஸ்ட் ஒப் லக்!' என காமிலை வாழ்த்தினர்.

மறுநாள் காலைக் கூட்டத்தில் காமிலின் திறமையை அதிபர் ஆசிரியர்கள் அனைவரும் புகழ்ந்து தள்ள சகமானவர்களின் பாராட்டு கரகோசம் வானைப் பிளந்தது. காமிலின் சந்தோசத்தில் துள்ளிக்குதித்தான். அவன் வீட்டாரும் அவன் சந்தோசத்தில் பங்கெடுத்து அவனது முயற்சியைப் பாராட்டினார்கள்!!!

(முற்றும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் துளிர்த்து எழுவோம்

எப்படி இருந்த எங்கள் ஊர்
இப்படி சிதைந்து போயிற்று
எங்கிருந்தோ வந்த இனவெறியர்
இங்கிருந்தவற்றை அழித்தனர்!

ஊர் அழிக்கப்பட்ட போது
வெந்து சாம்பராயின கடைகள்
ஊருக்குள் இருந்த மசூதிகள்
வெந்து கருகின ஊர்மனை!

அழிந்து போனவை சொத்துக்களும்
சொந்தங்களும் மட்டுமல்ல
அன்பான உறவும் நட்பும்
பரஸ்பர நம்பிக்கையும் தான்!

நீந்திக் கடக்க முடியாத காட்டாறு
நம்மீது ஏவி விடப்பட்ட பின்னரும்
ஆற்றுப் பெருக்கைக் கட்டுப்படுத்த
காவலரும் செயலற்று நின்றனர்!

உள்ளம் உருக உனை வேண்டினோம்
வெள்ளத்தை வடிய வைக்காது
மழை வரம் கேட்கும் கயவர்களை
தடுத்து நிறுத்தாது நிற்பதும் ஏனோ?

இனவாத கோரப் பற்களால் கிழிபட்டு
இருந்தவற்றையும் இழந்த பின்பும்
இருப்பை விட்டகலாத தலைமைகளே
இனியும் ஓட்டுக் கேட்டு வராதீர்கள்!

தீயில் வெந்து தீய்ந்த பின்னரும்
திடமாய் எழுந்து நிற்போம்
மக்கள் எங்களின் பூமி இதுவென
மீண்டும் துளிர்த்து எழுவோம்!!!

ச. முருகானந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய அனுபவ அலசல் – 13

கவிஞர். ஏ. இக்பால்

கவிதை பற்றின சிறுகுறிப்பொன்று!

'சிறந்த சொற்கள் சிறப்பான ஒழுங்கில் அமைந்ததுதான் கவிதை' என்பர் அறிஞர். ஒரு சொல்லிற்குப் பொருளாற்றலும் உண்டு. இவ்விரு தன்மைகளையும் சிறந்த வகையில் புலப்படுத்துவதுதான் கவிதை. கவிஞன் புலப்படுத்தும் போது பல உத்திகளையும் கையாண்டு உணர்த்துகிறான். அந்த உணர்த்தல்தான் கவிதையின் மொழியென உலகியலார் உணர்த்தி நிற்கின்றனர். சொல், பொருள், ஓசை, அலங்காரம், சொல்லுக்கப்பால் குறிப்பாக நிற்கும் உணர்வு ஆகிய அம்சங்களை கவிதை உள்ளடக்கினாலும், அது உணர்த்தும் உணர்வுதான் மேலே எழும்.

எழுத வாசிக்கத் தெரியாத தாய்மார்களினால் எழுந்த கிராமியப் பாடல்களே கவிதை வரலாற்றில் முதன்மை பெறுவன என்பதைக் கற்கும் மாணவர்கள் கவனித்தல் அவசியம். இன்று நாட்டுப்புறவியல் ஆய்வில் முதலிடம் பெறுவது நாட்டுப்புற இலக்கியம் FOLK LITERATURE இதில், 1. நாட்டுப்புறப் பாடல்கள் FOLK SONGS, 2. நாட்டுப்புறக் கதைகள் FOLK TALES, 3. நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் FOLK BALLADS, 4. பழமொழிகள் PROVERBS, 5. விடுகதைகள் RIDDLES, 6. புராணங்கள் MYTHS முதலியன.

கவிதையின் எழுச்சிக்கு ஆதாரம் நாட்டுப்புறப் பாடல்கள்தான். தமிழ் படிக்கும் ஒவ்வொரு மாணவரும் இதில் கவனம் செலுத்தி உங்கள் பிராந்தியத்திலுள்ள கிராமியப் பாடல்களைக் கணக்கில் எடுத்தல் அவசியம். நான் அம்பாரை மாவட்டத்தின் அக்கரைப்பற்றைச் சேர்ந்தவன். அக்கரைப்பற்று, பொத்துவில், கருவாட்டுக்கல் சம்மாந்துறையை அடுத்த பகுதி இம்மூன்று பிராந்தியங்கள் தான் கிராமியக் கவிதையின் பிறப்பிடங்கள். ஏனைய பகுதிகளில் சுட்டுப் போட்டாலும் கிராமியக் கவிதைகள் பாடவரா. இன்றைய கிராமிய இலக்கிய ஆய்வாளர்கள் எனக் கணக்கெடுக்கும் வெள்ளவத்தை மு. இராமலிங்கம், பேராசிரியர் சு. வித்தியானந்தன், வித்துவான் F.X.C. நடராசா, கலாநிதி பாலசுந்தரம், எஸ். முத்துமீரான், எஸ்.எச்.எம். ஜெமீல் போன்றவர்களுக்கு ஆதர்சம் நான் குறிப்பிட்ட மூன்று இடங்களின் கிராமியக் கவிதைகள்தானெனின் மிகையல்ல.

இந்தப் பெருமையுடன் குருநாகல் பகுதியில் பறகஹதெனிய வீதியில் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் போது பக்கத்திலிருந்த ஒருவரிடம் இலக்கியம் பற்றிக் கதைத்துக் கிராமியக் கவிதை பற்றியும் கதையளந்தேன். அவர், இங்கும் அப்படிக் கவிதைகள் உண்டு என்றார். ஞாபகமில்லையா? என்றபோது, ஒன்றேயொன்று ஞாபகம் உண்டென்றார். கூறுங்கள் பார்ப்போம் என்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காது குத்தின சுறுக்கும்
கடுக்கன் போட்ட சுறுக்கும் - அது
ஆட்டிப் பாத்த சுறுக்கும் - அது
அறுந்து விழுந்த சுறுக்கும்"

எனப் பாடிக் காட்டினார். எனது மெய் சிலிர்த்துவிட்டது. இது குருநாகல் பகுதி முஸ்லிம் மக்களின் பாடல்களில் ஒன்று. நாம் மற்றவைகளைத் தேட வேண்டிய கடமைப்பாடுடையோம்.

குறிப்பிட்ட பாடலைக் கேட்ட பின்பு ஒரே மனச் சுழற்சி. இதற்கீடான பாடலொன்றைப் படிப்பித்த ஞாபகம் எழுந்தது. G.C.E. A/L செய்யுள் தொகுப்பிலுள்ள கம்பதாஸனின் 'உதிர்ந்த மலர்' கவிதையை நோக்குங்கள்.

'முள்ளுச் சிறு செடியின் - கணவாய்
மூண்டு சிரித்த மலர்
கன்னெனும் பொக்கிஷத்தால் - விம்மலிலே
கர்வம் அடைந்த மலர்

பனித்துளி மணிசூடித் - தென்றலின்
பாட்டினைக் கேட்ட மலர்
கனிந்துள விண்ணதன் கீழ் - மௌனக்
கல்வியைக் கற்ற மலர்

அந்திச் சிவப்பினையும் - விண்மீன்
அழகின் விழிப்பினையும்
சிந்தையிற் கொண்ட மலர் - மணமே
செய்து திளைத்தமலர்

வீழந்து கிடக்குதையா - உச்சி
வெய்யிற் சுடலையிலே
வாழ்வின் விருப்பங்களை - மண்ணிலே
வரைந்துளதோ வண்டே'

வாழ்க்கையின் தத்துவத்தைக் கூறும் அதே கிராமியப் பாடலின் கருத்தைத்தான் கம்பதாஸனின் இக்கவிதையும் கூறிநிற்பதை சற்று விரித்து உணர்ந்து இரசித்துப் பாருங்கள்.

கிராமியக் கவிதைகளின் பிறப்பிடத்திலிருந்துதான் தமிழில் கவிதை பிறந்திருக்கிறது என்பதை யாரும் மறந்திடவோ, மறுத்திடவோ முடியாது.

கிராமியத் தமிழாகத் துளிர்ந்த தமிழ், அழகு தமிழாக வடிவம் பெற்றுச் சங்க இலக்கியங்கள் தோன்றியதென அறிகிறோம். காதல் பற்றிய கற்பனை அகத்துறையாகவும் வீரம், கொடை, புகழ் பற்றிய உண்மைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறத்திணையாகவும் அக்கால மக்களின் வாழ்க்கையோடு ஒட்டிய பாடல்களான சங்க காலக் கவிதைகள் தமிழின் கவிதைத் தோற்றமெனலாம்.

சங்க மரபு ஒரு தனித்துவமுடைய மரபு. கவிதைகளைப் பார்த்தால் இயற்கை வர்ணனை போலிருக்கும் உண்மை அதுவல்ல. மனிதரின் காதலைப் பாடுவதே நோக்கமாயிருக்கும். இதற்குத் துணை செய்வது இயற்கை வர்ணனைதான்.

'ஞாயிறுபட்ட அகல்வாய் வானத்து
அளியதாமே கொடுஞ்சிறைப் பறவை
இறையுற ஓங்கிய நெறி அயல் மரா அத்து
இரை கொண்டமையின் விரையுமால் செலவே!'

திணை : நெய்தல்
பாடியவர் : தாமோதரனார்
குறுந்தொகை : 92

இந்தப் பாடல் அந்தி வானத்தில் செல்லும் பறவைக் காட்சியைக் கூறுவதல்ல. இம்மரபு சங்க காலத்திலில்லை.

இது 'காதலால் வாடிய காதலி தன் தலைவனுடைய பிரிவால் மிக நைந்து சாயங்காலப் பொழுது கண்டு வருந்திக் கூறியது.

நாம் இக்கவிதைக்குப் பொருள் சொல்வோமேயானால் "கதிரவன் மேற்கே சாய்ந்த அகன்ற வானத்தில் பறந்து செல்லும் வளைந்த சிறகுகளையுடைய பறவைகள் இரங்கத்தக்கவை. அவை கூடுகட்டித் தங்குவதற்கு ஏற்றவாறு ஓங்கி வளர்ந்த மாமரத்திலுள்ள குஞ்சுகளின் வாய்க்குள் செருகுவதற்கு இரை எடுத்துச் செல்வதால் அவ்வளவு விரைவாகச் செல்லுகின்றன' எனக்கூறுவோம். சங்க காலக் கவிதை மரபில் உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள் என்பன உண்டு. அகப்பாடல்கள் பெயர் குறித்தே பாடப்பட்டன.

இம்மரபு கிராமிய வழக்கிலும் உண்டு. எங்களூர்க் கிராமியப் பாடலொன்று:

'ஏத்தாலை வேளாண்மை
இனஞ்சோலை பூங்குடலை
மாட்டால் அழியுமென்டு - எங்கட
மன்னரிடம் சொல்லிடுங்க'

'அகவல்' எனும் ஆசிரிய யாப்பில் சங்கப்பாடல்களாக எட்டுத் தொகையும், பத்துப் பாட்டும் மேற்கணக்கு நூற்களாக நாம் காண்கிறோம்.

அறமொழிந்த இருண்ட காலத்தில் ஒரு பொருளிலேயே அறநெறிப் பாடல்கள் தோன்றிய போதும், தமிழ்க் கவிதை வீச்சு சோர்வடையவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னரையும் மக்களையும் மரபு மறைந்து இறைவனையே பாடும் உயர்நிலைச் சமய எழுச்சி ஏற்பட்ட போதும் இலக்கிய விழிப்புடன் தமிழ்க் கவிதை, வடமொழிக் கலப்புடன் சொல்வளம், பொருள் வளத்துடன் ஓங்கி எழுந்தன.

சோழர் காலத்தே புதுமையான பரந்த இலக்கியங்கள் வீறுநடைபோட்டது. இலக்கணங்கள், நிகண்டுகள், சைவ வைணவ இலக்கியங்கள், பெருங்காப்பியங்கள், பரணி கோவை, உலா எழுந்ததோடு, உரைநடை இலக்கியம் விளக்கவுரையாக, கருத்துரையாக எழுந்தன. சங்ககாலத்தின் பின் இலக்கிய வளர்ச்சிக்குச் சோழர் காலத்தையே சமத்துவமாய்க் கூறமுடியும்.

இவ்விதம் வீறுபெற்ற தமிழ் இலக்கியம் அரசியல் காரணமாக சற்றுக் கீழிறங்கியது எனக் கூறலாம். சோழர் காலம் முடிந்து நாயக்காலம் பிறந்ததும் சிற்றிலக்கியங்கள் சிலவும், சொற்சிலம்பல் வித்தைகள் பலவும் சிலேடை வகைக் கவிதைகளும், பிரபந்தம், உலா, பரணி, பிள்ளைத் தமிழ் போன்ற சிற்றிலக்கியங்களும் எழுந்தன.

முஸ்லிம்கள் ஐரோப்பியர்களின் அரசியல் ரீதியாகக் கலந்ததும், கவிதை மரபுடன் வசன PROSE வளமும் தொடர்ந்தது. அச்சியந்திரம் இதற்கு மூல காரணமானது.

கவிதை மரபில் பெரும் களக்கத்தை மகாகவி சுப்பிரமணியப் பாரதியார் தமிழிலக்கியத்தில் விதைத்தார். தமிழ்க் கவிதையின் வளர்ச்சியைப் பாரதியை மத்திமமாகக் கொண்டு முன்னும் பின்னுமாக நோக்குதல் அவசியம்.

புவியனைத்தும் போற்றிட
வான் புகழ் படைத்துத்
தமிழைப் புகழில் ஏற்றும்
கவியரசு தமிழ் நாட்டுக்கில்லை என்னும்
வசை என்னால் கழிந்தது.

பண் அளவு உயர்ந்தது என்பண்
பா அளவு உயர்ந்தது என்பா

என்னைச் சுடர்மிகும் அறிவுரையுடன் படைத்துவிட்டாய்

சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது
சொற் புதிது சோதிமிக்க நவகவிதை
எந்நாளும் அழியாத மகாகவிதை

என்றன் பாட்டுத் திறத்தாலே
இவ் வையகத்தைப் பாலித்திட வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றெல்லாம் தன் திறமையை நிலை நிறுத்தித் தமிழ்க் கவிதைக்கு, தற்காலத் தமிழ்க் கவிதைக்கு உலக அந்தஸ்தை ஏற்படுத்தினான் பாரதி.

இந்த இடத்திலிருந்துதான் நாம் கவிதையை நயத்தலையும், கவிதையை உணர்தலையும் நோக்குதல் அவசியம்.

வசனத்தால் விளக்க முடியும். ஆனால், கவிதையில் உணர்த்த முடியும். அப்படியானால் பாரதி மேல் நாட்டுக் கவிதைப் பரிச்சயத்தால் வசனத்தால் உணர்த்தியிருக்கிறான். அப்போது, விளக்கப்பட வேண்டிய வசனம் இங்கே [illegible]

நிற்கின்றது.

சமகால சமூக நிகழ்வுகளை அப்பட்டமாகவே கூறமுடியாதவிடத்து உருவகித்துக் கூறும் புதுக் கவிதைகள் இன்னும் மலிந்து நிற்கின்றன. உருவகத்துக்கும், படிமத்துக்கும் வித்தியாசம் கானா முடியாது கலங்கும் புதுக் கவிதைகளும் மலிந்துள்ளன. ஒரு கட்டுரையில் தனது விளக்கத்தை விவரிக்க முடியாத தமிழ் மொழித் திறனற்றவர்களும் மூன்று வரிகளில் ஒரு சுலோகத்தை எழுதிப் புதுக் கவிதையாக்குவதையும் காண்கிறோம். எது எப்படியானாலும், மொத்தத்தில் சேர்த்துக் கவிதையைக் கணக்கெடுக்க முடியும். அவ்விதம் கணக்கெடுக்க வேண்டுமெனும் நியதியில் தான் தற்கால உயர் வகுப்பு மாணவர்கள் ஒப்படையும் PROJECT, செயற்றிட்டமும் ASSIGNMENT செய்ய வேண்டுமெனப் புதிய கல்வித் திட்டம் விதந்துரைக்கின்றது!!!

(இன்னும் வரும்)

**வாசகர் கவனத்திற்கு**

தாங்கள் அனுப்பும் படைப்புக்களை தட்டச்சு செய்து மின்னஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பின், பூங்காவனம் விரைவாக வெளிவர அது பேருதவியாயிருக்கும். ஆதலால் தயவுசெய்து மின்னஞ்சல் செய்ய முடியுமானவர்கள் இதை கருத்தில் கொள்ளுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்வு தரும்

சமுதாயக் காவலரே
சமூகத்தைக் காக்கின்ற மனமுண்டேல்
தமக்கென்ற நிலையகற்றி
தாய் வழியுடன் பிறப்பாய் மக்களினை
உமதாக்கிப் பணி புரிய
உயர்வேற்றும் கொள்கையினை மயப்படுத்தி
சமாதானத் தூதிட்டு
சாந்தமுடன் உழைத்திட முன்வருக!

இத்தரையில் எல்லோரும்
இயம்புவதிற் பயனில்லை சமூகத்தில்
உத்தமராய்ப் பெயரெடுத்தும்
உதவாது தன்பெருமை நிலைத்துவிட
சத்தியத்தை மறந்திங்கு
சறுகிய தீப்பாதையதன் இலக்கோடு
புத்தியுடன் அலைவதனை
புதைத்திடுவீர் இதயத்தில் நிறைவோடு!

மக்கள் மனம்
மறந்திங்கு வாழ்வோரின் பணியாவும்
எக்கணமும் அழிந்துவிடும்
என்பதனை நினைவிறுத்தி சமுதாய
அக்கறையே இலட்சியமாய்
அரும்பணிகள் செய்திட்ட முன்னோரின்
பக்கங்களைப் படித்தோதி
பணிபுரிவீர் நலம்பெறுவீர் உயர்வு தரும்!!!

மருதூர் ஜமால்தீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபலம்

## சிறுகதை

எஸ்.ஆர். பாலசந்திரன்

காலை பத்து மணியிருக்கும். சந்தானம் நாற்காலியில் அமர்ந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார்.

'ஐயா காப்பி...' என வேலைக்காரி லட்சுமி புன்முறுவலோடு கொண்டு வந்து வைத்தாள். அவளை நிமிர்ந்து பார்த்த சந்தானத்தின் மனதில் எண்ணங்கள் பறந்தன.

சந்தானம் ஒரு மனிதர். வயது 50. ஏற்றுமதி இறக்குமதி கொம்பனியில் உயர் அதிகாரி. வேலையில் புலி. நேர்மையானவர் எனப் பெயர் பெற்றவர். பெண் ஊழியர்களோடு மதிப்பாக நடப்பவர். அவருக்கு மனைவி சுமதி. மகள் சுகிலா வயது 20. மகன் ஆதித்தன் வயது 18. வேலைக்காரி லட்சுமி 13 வயதில் அவரிடம் வேலைக்கு வந்து சேர்ந்தவள். இப்போது வயது 17. மிகவும் நேர்மையானவள். மாதம் ஒருமுறை அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை தகப்பன் செல்லையா வந்து பார்ப்பான். லட்சுமியின் சம்பளப் பணம் செல்லையாவிடம் கொடுக்கப்படும். இதுவரை லட்சுமி தனது வீட்டிற்குப் போனதில்லை. காரணம் போனால் சிலவேளை திரும்பி வருவதற்கான மனம் வராது. ஐயாவும், அம்மாவும், பிள்ளைகளும் அன்பாக நடத்துகிறார்கள். இதுதான் என் வீடு என்று சொல்வாள். இப்போது என்ன பிரச்சினை?

பருவமடைந்த லட்சுமி ஒரு அழகியாகத் திகழ்ந்தாள். எந்த வேலையையும் கஷ்டம் பாராமல் செய்யும் திறமை, முறையான உணவுப் பழக்கம் அவளை அழகியாக்கியிருந்தது. நிறம் கொஞ்சம் பொது நிறமாக இருந்தாலும் வெகு லட்சணமாக இருந்தது. கலகலவென்ற சுபாவம் வேறு. இப்போது சந்தானத்தின் மனதில் சபலம் ஏற்பட்டுவிட்டது. வயதானால் சபலம் அதிகரிக்கும் என்பார்கள்.

லட்சுமி சிலவேளை குளித்துவிட்டு அறைகுறை ஆடைகளோடு தனது அறைக்கு உடை மாற்றப் போவது சந்தானத்தின் மனதில் ஆசைத் தீயை ஏற்றியது. இது தவறு என்று மனம் கூறினாலும் பசி வந்திடப் பத்தும் பறந்து போகும். காதல் பசி வந்தால் பதினைந்தும் பறந்து போகும் என்பது உண்மைதானே. சரியான சந்தர்ப்பம் வரும் போது தனது ஆசையை வெளிப்படுத்த வேண்டும் என எண்ணியிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று ஞாயிற்றுக் கிழமை. மனைவி சுமதி மார்க்கெட் பக்கம் போயிருந்தாள். மகன் ஆதித்தன் விளையாடப் போயிருந்தான். மகள் சுகிலா முதல் நாள் நண்பி ஒருத்தியின் வீட்டுக்குப் போய் அன்று மதியம் சாப்பிட்டுவிட்டு வருவதாகக் கூறியிருந்தாள்.

000000

காப்பி கொண்டு வந்து வைத்த லட்சுமியின் கையை சந்தானம் எட்டிப் பிடித்தார். முதலில் சாதாரணமாக எண்ணிய லட்சுமி பதறிவிட்டாள்.

'என்ன ஐயா? உங்களைத் தகப்பன் போல நினைத்து இருக்கிறேன். நீங்கள் இப்படிச் செய்யலாமா?' என்று கேட்டாள். ஆனால் அவற்றுக்கு செவிசாய்க்கும் நிலையில் சந்தானம் இல்லை.

'லட்சுமி! உன்னைப் பார்த்தால் நடிகை லட்சுமி போல் இருக்கிறாய். (இப்படிப்பட்ட வார்த்தைகளால்தான் மனைவி சுமதியை வளைத்துப் போட்டவர்). ஒருவருக்கும் இந்த விடயம் பற்றி தெரிய வராது' என்று கூறி லட்சுமியை அணைக்க முற்பட்டார். லட்சுமி பின்வாங்கினாள்.

'லட்சுமி! உனது அப்பா இந்த மாதம் வருவார்தானே. ஏதோ உனது அம்மாவிற்கு வைத்தியச் செலவுக்காக 2,000 ரூபா தருகிறேன். அதனைத் திருப்பித் தர வேண்டாம்' என்று கூறி மீண்டும் நெருங்கி வந்தார்.

லட்சுமி சீறினாள்.

'ஐயா நாங்கள் மானம் விற்றுப் பிழைக்கும் சாதி இல்லை. மானத்திற்காக உயிரையும் கொடுப்போம். உங்கள் காசும் வேண்டாம். இனி உங்களிடம் வேலையும் செய்யமாட்டேன்' என்று கூறியவள் அடுக்களைக்குள் புகுந்து தாழிட்டுக்கொண்டாள். சந்தானம் மிகவும் பதறிப்போனார். அவளைச் சமாதானப்படுத்த அடுக்களைக் கதவைத் தட்டினார்.

'ஐயா! போய்விடுங்கோ.. இல்லையெண்டால் மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்திக்கொள்வேன்' என்று உறுமினாள்.

அந்த நேரம் பார்த்து அழைப்பு மணி அடித்தது. சந்தானம் வெடவெடத்துப் போய் ஒருவாறு சமாளித்துக்கொண்டு முன்வாசல் பக்கம் போய் பார்த்தார். மகள் சுசீலாவும், லட்சுமியின் தகப்பன் செல்லையாவும் வந்திருந்தனர். செல்லையாவின் தலையில் ஒரு கட்டுப் போடப்பட்டிருந்தது. அவன் முனகிக்கொண்டிருந்தான். விறுவிறுவென உள்ளே நுழைந்த சுகிலா அடுக்களைக்குப் போய் லட்சுமியைக் கூப்பிடவே, லட்சுமி ஓடி வந்தாள்.

'லட்சுமி அப்பாவை உன் அறைக்குக் கூட்டிக்கொண்டு போ. இந்தா இந்த மருந்துகளை நேரத்துக்குக் கொடு. மத்தியானம் நல்ல கோழிக்கறி சமை' இப்படிப் பல உத்தரவுகள். சந்தானம் மகளைக் கேள்விக் குறியோடு நோக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோபாவில் அமர்ந்த சுகிலா,

'அப்பா! இன்று நான் பஸ்ஸில் வந்துகொண்டிருக்கும் போது, அருகில் இருந்த ஒரு தலை நரைத்த கிழட்டு மனிசன் என்னைச் சுரண்ட ஆரம்பித்தானே. இடையிடையே கண்ணடிப்பு வேறு. ஆபாசப் பேச்சு வேறு. விட்டேன் பளார் என்று ஒரு அறை. எல்லோரும் திடுக்கிட்டுப் போனார்கள். அடி வாங்கிய அந்த நரி என்னைப் பார்த்து மீண்டும் இளித்தது. பாவிப் பயல் இரத்மலானையில் பஸ் நிற்பாட்டிய போது விடுவிடுவெனப் போய் சிலரைக் கூட்டிக்கொண்டு வந்து எனது கையைப் பிடித்து இழுத்தான். ஒருவரும் எதுவும் பேசவில்லை. என்னோடு பஸ்ஸில் வந்திருந்த செல்லையா மட்டும் சீறி எழுந்து அவர்களுக்கு சரமாரியாக அடிகள் கொடுத்தார். அனைவரையும் வெளியில் தள்ளிவிட்டு பிறகு இறங்கிச் சண்டை போட்டார். சும்மா கணக்கா சண்டை போட்டார். ரவுடிகள் ஓடிவிட்டனர். ஓடும் போது ஒரு பாவி மட்டும் கல்லால் எறிந்துவிட்டு ஓடிவிட்டான். செல்லையாவுக்கு தலையில் காயம். இரத்தம்கொட்டியது. நான் உடனே ஒரு ஆட்டோ வண்டியில் செல்லையாவ்வையும் கூட்டிக்கொண்டு போய் எனக்குத் தெரிந்த வைத்தியசாலையில் சிகிச்சைக்கு கூட்டிச் சென்றேன். வைத்தியர் பயப்பட ஒன்றும் இல்லை என்றார். இரத்தம் சேதமானதால் ஒரு கிழமைக்கு கொஞ்சம் பலகீனமாக இருக்கும் என்று கூறி மருந்துகள் தந்தார். ஏனப்பா! வயது போன கிழடுகளுக்கு, இளசுகளைக் கண்டால் கிளுகிளுப்பு ஏற்படுகின்றது? அரபு நாடுகளைப் போல் தெருவில் நிறுத்திக் கல்லால் அடித்துக் கொல்ல வேண்டும்' எனப் பொரிந்து தள்ளினாள்.

சந்தானம் திகைத்துவிட்டார். சுகிலாவின் ஒவ்வொரு வார்த்தைகளும் அவரின் மனதைப் பிளந்தன. அது மட்டுமல்ல எந்தப் பெண்ணின் கற்பை, தான் சூறையாட நினைத்தானோ அவளது தந்தை தனது மகளைக் காப்பாற்றி இருக்கிறான்.

மூன்று நாட்களின் பின் செல்லையா திரும்பிப் போகும்போது, லட்சுமியும் வீட்டுக்குப் போகப் போவதாக கூறியதற்கான காரணம் சந்தானத்திற்கு விளங்கிவிட்டது. தனது தவறை சந்தானம் உணர்ந்து மிகவும் கவலைப்பட்டார். ஒருவரும் இல்லாத சமயம் பார்த்து லட்சுமியிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

'மகளே நான் செய்யப் போனது பெரிய பிழைதான். ஆனால் அதற்காக நீ இந்த வீட்டை விட்டுப் போனால் அந்த மனவேதனையிலேயே செத்துவிடுவேன். தயவு செய்து போகாதே. இனி என்னால் இதுபோன்ற தவறு நிச்சயமாக நடக்காது. உனக்குத் திருமணம் நிச்சயம் ஆகும் வரை இங்கேயே இரு. நானே உன் தகப்பன் ஸ்தானத்தில் இருந்து உன்னை கன்னிகா தானம் பண்ணிக்கொடுக்கிறேன். அதுவே எனக்குப் பிராயச்சித்தமாக அமையும்' என்றார்.

லட்சுமியும் கலகலவென்று சிரித்துவிட்டு, 'நான் போகவில்லை அப்பா!' என்று கூறினாள். சந்தானம் மிகுந்த ஆச்சர்யத்தோடு அவளை நோக்கினார். இனி சந்தானம் பிழைவிடமாட்டார். தூசி படிந்த கண்ணாடியைத் துடைத்துவிட்டது போல அவர் மனம் சுத்தமாகிவிட்டது!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீக்குச்சி

விருட்சத்தை வெட்டி
குச்சிகளாய் பெட்டியிலிட
சிரசமிட்டு சீரச் செய்யும்
மனித உராய்வுகளை
எங்கணம் உன்னை.......

கர்ப்பத்திலிருக்கும் சிசுவுக்கும்
பெட்டியிலிருக்கும் குச்சிக்கும்
முடிச்சுப் போடலாம்.
இரண்டும் வெளியில் வந்தால்
எதுவும் நடக்கலாம்!

கல்லை உரசி தீ படைத்தவன்
உன்னை உரசி குளிர் காய்கிறான்
மௌனமாய்!

சிலர் உரசினால் களிப்பு
உன்னை உரசினால் நெருப்பு
இரண்டும் பற்றிக் கொள்ளும்
பத்தியும் கொள்ளும்!

சிபிக்கும் உனக்கும்
சம்பந்தம் உண்டோ?
அவனோ.. புறாவிற்கு உடல்
மாய்த்து
உயிர் கொடுத்தான்.
நீயோ... இரவுக்கு ஒளி கொடுத்து
உடல் மாய்கிறாய்!

இருட்டறைக்குள் ஒளிந்து கொண்டு
ஒளி கொடுக்கும் ஒற்றையனே!
அடுப்பில் தீ மூட்டவும்
காட்டில் தீ பற்றவும்
காரணம் நீதான் என

தூண்டியை விட்டு
துலங்களுக்கு வழக்காடுவது
நியாயமில்லைதான்
என்ன உலகமடா இது
கோம்பைக் காரனுக்கு
கேவலச்சிறை!

சத்தமில்லாமல் யுத்தம்
செய்யக்
காத்திருக்கும் உத்தமனே....!

உன் ஒற்றைத்
தலையைப் பணயம் வைத்து
மற்றத் தலையைக் காக்க
தீ மகுடம் சூடி ஒரு நிமிடம்
நீ உயிர் வாழ்ந்தால் போதும்
மற்றத் தலைக்கு
மரண பீதி சற்றுக் குறையும்!

அறிவியல் தந்த
அகிலம் இப்போ
உன்னை.....
வேண்டாப் பொண்டாட்டியாய்ப்
பார்க்கிறது.
“ஹேஸ்” எனும் சின்ன வீட்டில்
பெரிய இன்பம்
கிடைக்குமென்று
உன்னைத் தள்ளி வைக்க
ஊர்வலம் நடக்கிறது.
மரணத்திற்குத் தயாராய் இரு
என்ன செய்வது?
“பழையன கழிதலும்
புதியன புகுதலும் வழுவல
கால வகையினாலே....”

ஆர். சதாத் - முனைச்சேனை, கிண்ணியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுந்தொகையில் இரு காட்சிகள்

நுணாவிலூர் கா. விசயரத்தினம் - இலண்டன்

சங்க இலக்கியத்தைப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என இரு பிரிவுகளாக வகுத்துப் பொருள் விரித்துள்ளனர். இவற்றைப் பதினெண் மேற்கணக்கு நூல்கள் என்றும் வழங்குவர். சங்கப் பாடல்களைப் பல ஊரினர், பல நாட்டினர், பல சமயத்தவர், பல தொழிலினர், அந்தணர், அரசர், வணிகர், பெண்பாற் புலவர், பல பொருள் பற்றிப் பல்வேறு காலங்களில் பாடிய பாடல்களின் தொகுப்பே பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் ஆகும்.

எட்டுத்தொகை நூல்களாவன:- (1) நற்றிணை, (2) குறுந்தொகை, (3) ஐங்குறுநூறு, (4) பதிற்றுப்பத்து, (5) பரிபாடல், (6) கலித்தொகை, (7) அகநானூறு, (8) புறநானூறு என்பனவாம். இவ்வகையான எட்டு நூல்களையும் ஒருங்கே அமைத்து ஒரு பழம் பாவில் வடித்துள்ள பாங்கினையும் காண்போம்.

'நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியே அகம்புறம் என்று
இத்திறத்த எட்டுத் தொகை.'

நறு மணம் வீசும் 401 பாடல்களைக்கொண்ட குறுந்தொகை நூல் இப்பாடலில் இரண்டாம் இடத்தில் அமைவது அதன் சிறப்பாகும். கடைச்சங்க காலத்தில் எழுந்த குறுந்தொகைப் பாடல்களின் இலக்கிய வளத்தால் ஈர்க்கப்பட்டு இந்நூலைக் கற்று, ஆராய்ந்து, பட்டம் பெற்றோர் பலராவர். அவருள் பேராசிரியர் மு. வரதராசனார், பேராசிரியர் சி. பாலசுப்பிரமணியம், பேராசிரியர் தி. லீலாவதி, டாக்டர் கா. காளிமுத்து, பேராசிரியர் தெ. ஞானசுந்தரம், டாக்டர் வ.சுப. மாணிக்கம், தனிநாயக அடிகளார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இனி, குறுந்தொகைப் பாடல்களிலிருந்து தேடியெடுத்த இரு இலக்கிய உணர்வுகொண்ட காட்சிகள் விரிந்து, பரந்து, நம்முன் அரும் பெரும் காட்சி தந்து நிற்கும் அழகினையும் சிறப்பினையும் ஈண்டுக் காண்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி ஒன்று:-

தலைவியாய் நிற்பவள் குடும்பத்துக்கு ஒரே ஒரு பெண். செல்லப் பிள்ளையும்கூட. இவளுக்கேற்ற ஒரு தலைவனுக்கும் இத் தலைவிக்கும் திருமணம் நடந்தேறியது. இவர்கள் இருவரும் தனிக் குடித்தனம் நடாத்தச் சென்றுவிட்டனர். சில நாட்களின்பின் தலைவியின் செவிலித்தாய், தலைவியைப் பார்க்கச் சென்றிருந்தாள். ஆங்கே தலைவி புளிக் குழம்பு சமைத்து, கணவனுக்கிட்டு, அவன் இனிது என்று அவளைப் பாராட்டவே அகத்தே நிறைந்த மகிழ்ச்சி, புறத்தே இருவருக்கும் புன்முறுவலாய் முகத்தில் பூத்து விளங்கியது. இதைக் கண்ணுற்ற செவிலித்தாய் கடுநடையாய்ச் சென்று நற்றாய்க்கு உரைக்கும் கட்சி இது.

'முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅ உடீஇக்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்,
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.'

கூடலூர்க்கிழார் (167)

இப்பாவின் பொருள்:- கட்டித் தயிரைப் பிசைந்த அழகிய சிவந்த காந்தள் போன்ற கைவிரலைக் கழுவாது தன் பட்டாடையிலே கையைத் துடைத்துக் கொண்டு, தன் அழகிய கண்களில் தாளிதப் புகை படிந்து கண்பனித்த நிலையிலும், தான் துழாவிக் காய்ச்சிய புளிக் குழம்பைக் கணவன் இனிதென உண்டலால், இயல்பாகவே ஒளிபொருந்திய முகத்தையுடைய அத் தலைவியின் முகம் பிரகாசமாய் மலர்கின்றது.

'முளிதயிர்' என்பதைத் தொடக்கத்தில் வைத்ததால் இல்லச் சிறப்பினையும் செல்வ நிலையையும் காண்கின்றோம். 'காந்தள் மெல்விரல்' என்பதால் தலைவியின் அழகினை அறிகின்றோம். கட்டித் தயிரை அவள் தீம்புளிப் பாகர் செய்ய பிசைந்தே ஆகவேண்டும். 'கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ' என்ற தொடர் விரைவாலும், கடமையே சிந்தனையாலும் தன் பட்டாடையிலே கைகளைத் துடைத்துக் கொண்டும், அந்த ஆடையை மாற்றிக் கொள்ளவும் நேரமின்றிச் செயல்படுகிறாள் என்பதும் புலனாகின்றது. 'குவளை உண்கண்' என்பது அவளின் கண்களின் அழகினை எடுத்துக் காட்டுகின்றது. அப்படியான கண்களில் 'தாளிதக் குய்ப்புகை' படிந்து கண்பனித்து அவள் நிற்கும் காட்சி அவள் இவ்வேலைக்குப் புதிது என்பதையும் காட்டுகின்றது.

எனவே, சமைத்த கையோடு வந்து நிற்கிறாள். அவள் சமையல் செய்ததும் உணவு போடவேண்டியதாயிற்று. அவள் ஆர அமர நின்று, பின் சற்று ஓய்வு எடுத்து, உடை மாற்றிக் கொண்டு வந்து உணவு படைத்தாளில்லை. அதே உடையோடும், அதே நிலையோடும் வந்ததைத்தான் காட்டுகின்றது. அழுக்குப்பட்ட பட்டாடையைக் கழற்றி உடுக்காத நிலையில் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கின்றாள். கண்கள் குய்ப்புகை கமழத் தாளிதம் செய்த கையோடு வந்து காட்சி தருகின்றாள்.

அடுத்த தொடர் 'தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்' என்று வருகின்றது. ஆகா! இதைச் செய்யவா இத்தனை ஆர்ப்பாட்டம் என்று நினைக்கத் தோன்றுகிறது. 'தான் தன் கைப்படச் சமைக்க வேண்டும். அவன் அதை இனிதென உண்டு மகிழ வேண்டும்' என்பதுதான் ஒரு குடும்பத் தலைவியின் தாரக மந்திரம். 'தான் துழந்து அட்ட' என்பதால் எப்படியும் நன்கு சமைக்க வேண்டுமென்ற முயற்சி தெரிகின்றது. ஏனோ தானோ என்று சமைத்துப் பரிமாற அவள் விரும்பவில்லை. தனக்குச் சமையல் பழக்கமில்லை என்றாலும் மனம் கோணாது மிக அவதானத்துடன் சமைக்கிறாள் என்பது புலனாகின்றது. 'தீம்புளிப் பாகர்' என்பது புளிப் பச்சடி. தலைவனுக்கு அப்புளிப் பச்சடிதான் பிடிக்கும் என்பதை அவள் அறிந்திருந்தாள். புளி என்றதும் நாவில் எச்சி ஊறுகின்றது. 'தீம்புளி' என்பது இனிமையான புளிக்கறியாகும்.

தலைவனும் தலைவியும் புதுத் தம்பதிகள். ஒருவரை ஒருவர் விட்டுக் கொடாதவர். தன் அன்புக்கினிய ஆசை மனைவி சமைத்த சமையலைத் தலைவன் 'இனிது' எனக்கூறிக் கொண்டே உண்ணுகிறானாம். 'ஏனது சுவைப்பினும் நீ கைதொட்டது வானோர் அமிர்தம் புரக்குமால்' என்பதற்கிணங்க, தலைவன் 'இனிது' என்று வாய்விட்டுச் சொல்லித் தலைவியை மகிழ வைக்கின்றான். 'கணவன் உண்டலின்' என்னுமிடத்து குடும்ப உறவு வலியுறுத்தப்படுவதைக் காண்கின்றோம். இவ்வாறு தலைவன் உண்ணுவதைப் பார்த்து 'ஒண்ணுதல் முகன் நுண்ணிதின் மகிழ்ந்தன்று' என்றவாறு தலைவியின் முகம் மலர்கிறது. தலைவி இயல்பாகவே ஒளியுடைய முகத்தினையுடையவள். அத் தலைவியின் முகம், அன்றலர்ந்த தாமரை மலர்போல் மலர்ந்து காட்சி தருகின்றது.

இத் தலைவன் தலைவியரிடையே நிறைந்துள்ள மனஉறவை, ஈடுபாட்டை, ஒருவர் குறையை ஒருவர் தாங்கி, இருவரும் மனநிறைவோடு பிரியா நற்குடும்பமாக வாழ்ந்து, இருவரும் இல்லறம் போற்றுவர் என்ற உண்மையை இக் காட்சி தருகின்றது.

பேராசிரியர் மு.வரதராசனார் கூறுவதுபோல், 'பாட்டுக்கு உயிர் உணர்ச்சி உடல் கற்பனை உடை ஒலிநயம். குறுந்தொகைப் பாட்டுக்களின் உடை எளியதாக உள்ளது. உடல் அழகுற அமைந்துள்ளது. உயிர் போற்றத்தக்கதாக உள்ளது. உயிரின் வாழ்வுக்காக உடலும், உடலின் காப்புக்காக உடையும் அமைந்த அமைப்பை இவற்றில் காணலாம். (குறுந்தொகைச் செல்வம், ப. 4.)

காட்சி இரண்டு:-

**இக் காட்சிக்கும்** குறுந்தொகையில் வரும் 'கொங்குதேர் வாழ்க்கை..' என்ற **இரண்டாவது பாடலைத்** தெரிவு செய்துள்ளோம். இப்பாடலும் பலராலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தாளப்பட்ட சிறப்பினை உடையது. இதை எழுதியவர் 'இறையனார்' ஆவார். இறையனாரைத் தெய்வப் பெயராகக் கருதுவோரும் உளர். 'பேரெயின் முறுவலார்', 'குறியிறையார்', 'களவியல் இறையனார்' என வரும் தெய்வப் பெயர்களைப் போலப் புலவருக்கமைந்த தெய்வப் பெயரென்றே கருதப்பட வேண்டும். இறையனாரின் கற்பனைத் திறன் கொண்ட பாடலைப் பார்ப்போம்.

'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழிஇய நட்பின் மயிலியல்
செறிஎயிற்று அரிவை கூந்தலின்
நறியுவும் உளவோ நீயறியும் பூவே.' - இறையனார் (02)

இப்பாவின் பொருள்:- பூந்தாதை ஆராயும் வாழ்க்கையினையும், அழகிய சிறையினையும் கொண்ட தும்பியே! நீ என்னிடம் வைத்த விருப்பத்தால் கூறாது, உண்மையாய்க் கண்டதையே சொல். நெருங்குதல் பொருந்திய நட்பினையும், மயிலின் சாயலினையும், நெருங்கிய பல்லினையுமுடைய அரிவை கூந்தலின் மணமுடையனவும் உளவோ? நீ அறியும் பூக்களில் - கண்டது மொழிவாயாக!

இயற்கைப் புணர்ச்சி இறுதிக்கண் தலைவன் தலைவியை நலம் பாராட்டியது. பொதுவாகத் தலைவியின் கூந்தல் நறுமணம் உடையதென்று பலரும் புகழ்ந்து பாடுவது மரபு. குறுந்தொகையில் 'நறுமென் கூந்தல்', 'நாறிருங் கூந்தல்', 'நறுங்கதுப்பு', 'கூந்தல் ஆம்பல்', 'தேம்பாய் கூந்தல்', 'கொடிக் கூந்தலள்' என்றும், தொல்காப்பியத்தில் 'கூழை விரித்தல்' என்றும், திருக்குறளில் 'கனங்குழை மாதர்கொல்' என்றும், கம்பராமாயணத்தில் 'குராவரும் குழலி' என்றும், நளவெண்பாவில் 'கருங்குழலார்', 'மொய் குழலாள்' என்றும், கலித்தொகையில் 'இருள்உறழ் இருங்கூந்தல்' என்றும் இலக்கியங்களில் பதியப்பட்டு, மாதர் கூந்தல் பெருமை பேசப்பட்டுள்ள பாங்கினையும் காண்கின்றோம்.

மேலும், இப்பாடலில் இறையனார் ஓர் எதிர்க் கருத்துத் தோற்றுவிக்கவல்ல வினாவாக எழுப்பியுள்ளார். அது இயற்கையான மணமேயன்றிப் பூச்சூடுவதாலோ, சாந்து பூசுவதாலோ வந்ததன்று என அழுத்தம் பெற வெளிப்படுத்தியுள்ளார் எனவேதான் இயற்கையாகவே மகளிர் கூந்தலுக்கு மணமுண்டென்று ஒரு சாராரும், மலர் சூடிச் சாந்து பூசுவதால் ஏற்படும் செயற்கைமணமே என்று கூறுவோர் மறு சாராருமாய் அன்று பெரும்வாதம் எழுந்திருக்கவேண்டும் என்பது தெரிகின்றது.

இப்பாடலை முன்னிலைப் படுத்திப் பின்னாளில் கதைகள், புராணங்கள் திரைப் படங்கள் எழுந்தன. இறையனாரும் அவரைச் சார்ந்தோரும் மாதர் கூந்தலுக்கு இயற்கை மணமுண்டெனவும், நக்கீரரும் அவரைச் சான்றோரும் இயற்கை மணம் இல்லையெனவும் விவாதித்து நாட்டில் பெரும் பரபரப்பை உண்டுபடுத்தினர். இதனால் பாடலும் பெரும்புகழ் பெற்று உயிர்ப் பாடலாயிற்று. சங்கம் என்ற ஓர் அமைப்பு இருந்தமை இக்கதையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் உறுதிப்படுகிறது. புலவர்கள் கூடி விவாதித்தனையும், ஒரு தலைமைப் புலவன் இருந்ததையும், பாண்டிய மன்னன் அவைப் பொறுப்பாயிருந்து நடாத்தியதையும் காண்கின்றோம். 'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி, நற்கனகக் கிழி தருமிக்கு அருளினோன் காண்' என (திருப்புத்தூர்த் திருத்தாண்டகம் - 2) கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இதைத் திருநாவுக்கரசர் குறிப்பிடுகிறார்.

தருமி என்னும் ஒரு வறிய பிராமணப் பிரமச்சாரி, சோமசுந்தரக் கடவுளுக்கு முக்காலப் பூசைகளும் தவறாது நடாத்தி வந்தான். இவன் கேட்டுக் கொண்டதற்கிணங்கச் சோமசுந்தரக் கடவுள் இப்பாடலைத் தருமிக்கு இயற்றியளித்தாரென்றும், பாண்டியன் தன் ஐயம் தீர்த்தற்பொருட்டுச் சங்க மண்டபத்தின்முன் கட்டிவைத்த பொற்கிழியை, இப் பாடலைக் கேட்டு மகிழ்ந்து அளிக்க முன் வந்தபொழுது, நக்கீரர் 'இப் பாடலில் பொருட்குற்றம் உண்டு' என்று கூறித் தடுத்தார் என்று கதை போகிறது. இறைவனே வந்து நெற்றிக் கண்ணைக் காட்டிய பொழுதும் நக்கீரர் தம் கருத்திலிருந்து நழுவாது 'குற்றம் குற்றமே!' என்று கூறி நின்றமை போற்றற்குரியது. இந்நிலையில் வெம்மை தாங்காது நக்கீரர் பூம்புனல் ஒன்றில் பாய்ந்து, இறைவன்பால் பதிகமொன்று பாடித் தப்பித்துக் கொண்டார்.

'கொங்குதேர் வாழ்க்கை', 'அஞ்சிறைத் தும்பி', 'காமம் செப்பாது', 'கண்டது மொழிமோ', 'பயிலியது கெழீஇய நட்பின்', 'மயிலியல்', 'செறி எயிற்று', 'அரிவை கூந்தல்', 'நறியவும் உளவோ?', 'நீ அறியும் பூவே?' என்பன இறையனாரின் அடுக்கு வரிசையால் நம்முன் ஓர் இயற்கை இலக்கியக் காட்சி தோன்றிக் கதை பல கூறி நிற்கும் விந்தையைக் காண்கின்றோம். மேலும் அவரின் மிகுந்த கற்பனைத் திறனையும் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

'கொங்குதேர் வாழ்க்கை', 'அஞ்சிறைத் தும்பி' என்ற தொடர் பூந்தாதை ஆராயும் வாழ்க்கையினையும், அழகிய சிறையினையும் கொண்ட வண்டு! என்ற பொருளைத் தந்து, இறையனார் இவ் வண்டினைத் தேர்ந்தெடுத்தமைக்குரிய காரணமும் தெளிவாகின்றது. 'அரிவை கூந்தலின் நறியவும் உளவோ நீயறியும் பூவே' - இவ்வரிவை கூந்தலினும் மணமுடையனவும் உள்ளன கொல், நீ அறியும் பூக்களுள்? இதற்காகத்தான் அந்த வண்டினைத் தெரிந்தெடுத்தார். மெச்ச வேண்டிய ஒரு சிறந்த தெரிவாகும்.

களவொழுக்கத்தில் புணர்ச்சிக்குப்பின் தலைவன் தலைவியைத் தன்னை மறந்து பாராட்டுவது ஒரு மரபாகும். தன் தலைவியின் கூந்தலுக்கு மணமுண்டெனக் கூறுவது இயல்பேயாகும். அவன் மனநிலையில் அவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக் கூந்தலில் மணமிருக்கத்தான் செய்கிறது. இன்னும் அவள் வாலெயிறு ஊறும் நீரை அவன்

'பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்.' (குறள், 1121)

என்று பகரவில்லையா? அவ்வாறாயின் இப்பாடலைத் தலைவன் மனநிலையில் வைத்து ஒப்பிடின் முற்றிலும் சரியானதும் உண்மையானதும் கூட. தன் தலைவியின் கூந்தலில் அமைந்த பூவானது வேறெந்தப் பூவைக் காட்டிலும், அது அவனுக்கு நறுமணம் மிக்கதே.

'கூந்தலின் நறியவும் உளவோ' என்றது நன்னயமுரைத்தல். அவளைப் பார்த்துச் சொல்ல வேண்டியவற்றையெல்லாம் வண்டைப் பார்த்துச் சொன்னதற்குக் காரணமும் உண்டு. தலைவன் தலைவியின் மெய் தொட்டுப் பயிறல் ஆகியன நிகழ்த்திக் கூடினானாயினும் இன்னும் வண்டினைப்போல் தான் அவளருகில் செல்லும் உரிமை பெற்றுவிடவில்லை என்பது உண்மைதான். ஆனால் வண்டானது அடிக்கடி அவள் கூந்தலிலும், பூவிலும் தடையின்றிச் சென்றிருக்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ளது. இது இயற்கை அமைப்பாகும். எனவேதான் 'காமம் செப்பாது கண்டது மொழிமோ!' என்று அமைத்துச் சென்றார் இறையனார்.

'ஆயின் கொங்குதேர் வாழ்க்கைக்கு - நூல்நயம் தேர்ந்தறியும் வாழ்க்கைக்கு - நடுநிலைமை வேண்டும் காமம் செப்பாது கண்டது மொழியும் திறன் வேண்டும்.' - (கொங்குதேர் வாழ்க்கை. ப. 72) என பேராசிரியர் மு. வரதராசனார் சுட்டிக் காட்டியிருப்பது சிந்தனைக்குரியதாகும். மேலும் அவர் 'கொங்குதேர் வாழ்க்கை' என்பதைப் 'புலமையை ஆராயும்' திறனாய்வு வாழ்க்கைக்கு ஒப்பிட்டும், ஆராய்ச்சியிலும் 'காமம் செப்பாது கண்டது மொழியவேண்டும்' என வற்புறுத்தியும் தந்துள்ள கருத்துகள் நம் சிந்தையில் பதியப்பட வேண்டியவை!!!

"பூங்காவனம்" கிடைக்குமிடங்கள்

பூபாலசிங்கம் புத்தகசாலை கொழும்பு - 06
பூங்காவனம் பதிப்பகம் - கல்கிசை

ப்ரியமான வாசகர்களே!
உங்களால் இயன்ற அன்பளிப்புக்களை வழங்குவதன் மூலம் 'பூங்காவனம்' சஞ்சிகையின் தொடர் வளர்ச்சிக்கு உதவுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளைய காலம் எப்படியோ?

தாய் தந்தையர்களால் பிள்ளைகள்
பாதுகாத்துப் பேணி
கட்டளையிட்ட காலம் அது..

பிள்ளைகளால் பெற்றோர்களுக்கு
கட்டளையிடும் காலம் இது..

கணவனின் சொல்லை ஒருபோதும்
மீறாத மனைவி வாழ்ந்த காலமது..
மனைவி கணவனை
கட்டளையிடத் துணிந்திடும் காலம்
இது!

சொற்ப பணமிருந்தால் போதும்
எதனையும் சாதித்திடலாம்
அது அந்தக்காலம்..

அதிக பணமிருந்தும் எதுவும்
ஆகிடாத காலம் இந்தக்காலம்..

ஆண்கள் உழைத்துண்டு வாழும்
காலமாக இருந்தது அக்காலம்..

ஆனாலின்றோ வெளிநாடு சென்றும்
பற்பல பதவிகளிலும் உழைக்கும்
காலமாயிற்றே பெண்கள்!

பரந்த வெளிதனிலிருந்து வரும்
சுத்தமான காற்றை சுவாசித்து
உடல் நலமாக வாழ்ந்தது
அந்தக்காலம்...

சூழல் மாசடைந்து நச்சுக்
காற்றை
சுவாசிப்பதால் நோயாளர்களின்
தொகையும் அதிகமாகிறதே
அது இந்தக் காலம்!

அன்று பெரியோர்களால் உரைத்த
முறைசீரான
விழுமியங்களெல்லாம் அன்று..

ஆடைக் குறைப்பும்
ஆபாசப் போக்கும்
அதிகரித்துவிட்டதே இன்று..

இக்காலத்தைவிடவும்
நேற்றைய காலம்
நல்ல காலமாக அமைந்திருந்தது
ஆனால் இக்காலத்தைவிடவும்
நாளைய காலம் எப்படியோ???

கலாபூஷணம் எம்.எம். அலி அக்பர் - கிண்ணியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரந்துண்டு வாழ்வதில் சுகமுண்டு..?

## சிறுகதை

சூசை எட்வேட்

'என்னங்க, டெங்கு ஒழிப்புக்காரர் வேனில வந்து சொல்லிக்கொண்டு போறாங்கள். வளவ துப்பரவாக வைச்சிருக்கட்டாம். கோம்பைகள், சிரட்டைகள், பேணிகள், குப்பைகள், சொப்பினுகள் ஒண்டும் இருக்கப்படாதாம். தண்ணி எங்கயும் தேங்கி இருக்கப்படாதாம். பத்தைகள கொத்தி துப்பரவாக்கட்டாம். உங்கட காதில விழ இல்லையே'

'எத்தின இடத்தில 'பைன்' (குற்றப் பணம்) அடிச்சுப் போட்டாங்கள் ஆயிரக்கணக்கில. இக்கணம் வந்து குற்றமடிச்சாங்கள் எண்டால் காசா இருக்கு வீட்டில. எள்ர காதானத்தான் கேப்பீங்கள். கெதியா அலுவல பாருங்கோ துப்பரவு பண்ணுறதுக்கு. ஆம்பிளை எண்டால் கை கால் துருதுரு எண்டு இருக்கவேணும். வீடுவாசலப் பார்க்கிறதில கவனம் கெட்டித்தனம் இருக்கவேணும். இது என்னடா எண்டால் ஊர் உளவாரம் பார்த்துக்கொண்டிருக்கவும், இடிச்சபுளி மாதிரி இருந்து கொண்டு யோசிச்சுக்கொண்டிருக்கவும் தான் தெரியும். தான் பெரிய கவிஞராம் மண்ணாங்கட்டியாம்' பத்மாவதி இப்படிப் பொரிந்து தள்ளியது இது முதல் தரமல்ல.

'கொஞ்சம் பொறப்பா.. எனக்கு காதென்ன செவிடே? இருந்து இருந்து எழுதி எனக்கு நாரி உளையுது. இந்தப் பத்தைகள கொத்த கூலிக்கு ஆள்பிடிக்க ஏலாமல் கிடக்குது. இதுமாதிரி சின்ன வேலைகளச் செய்து கொஞ்சக் காச வேண்ட ஒருவனும் வரான். நான் என்ன செய்ய? கொஞ்சம் பொறு கடவுள் வழிகாட்டுவார்'

'கடவுள் வழிகாட்ட முன்னம், வழிதேடிக்கொண்டு அவங்கள் வந்து பூரப்போறாங்கள். அதுக்குப்பிறகு உங்காத்தையும் எங்காத்தையும் தெரியும். அவங்கள் குற்றமடிச்சாங்கள் எண்டால், நான் 'பிறஸர்' அடிச்சே விழுந்துகிடப்பன்'

இந்தக்கதை கேட்டு கவிஞரும் இளைப்பாறிய ஆசிரியருமான சிவப்பிரகாசம் கதிகலங்கிப் போனார். விரைவாக செயல்பட எத்தனித்த அவர் சட்டையை எடுத்து மாட்டிக்கொள்ளலானார். பத்மாவதி நாவசைத்தால் அது சாட்டையடி போலாகும்.

அப்போது வெளிவாயிலில் அழைப்புக்குரல் கேட்டது. மெத்த வினயமாகவே இருந்தது. அதுவும் பெண்குரல்.

பத்மாவதிதான் வாயிலண்டைபோய் திறந்து எட்டிப்பார்த்தாள். அங்கே இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் பிச்சைக்காரக் கோலத்தில் காட்சியளித்தார்கள். அவர்கள் வயதானவர்கள்தான் ஆனால் கிழடுகள் என்று சொல்லமுடியாது.

'அம்மா தாயே! பிச்சை போடுங்கோ தாயே, இண்டு முழுக்க சாப்பாடும் இல்ல. ஏதாவது உதவிசெய்யுங்க அம்மா புண்ணியம் கிடைக்கும்'

'நீங்க எங்க இருந்து வாறீங்க? உங்களுக்கு ஆம்பிள உதவி இல்லையா?' பத்மா சும்மா கேட்டாள்.

'நாங்கள் மூதூரில இருந்தநாங்க அம்மா. இந்தப் பிரச்சனைக்க அகப்பட்டு ஆம்புளைகள் பரலோகம் போயிற்றாங்கள். நாங்கள் திருகோணமல வந்து நிறுவனம் தந்த வீட்டில இருக்கிறம். பிரச்சன முடிஞ்சாலும் எங்கட ஊருக்குப் போய்க்கொள்ள ஏலாம இருக்கு. நிவாரணத்தையும் இப்ப நிப்பாட்டிப்போட்டாங்கள். சாப்பிடவும் பாதையில்லாமல் இருக்கு. ஏதாவது உதவி செய்யுங்க அம்மா!'

இப்போது சிவப்பிரகாசமும் வந்து சேர்ந்துவிட்டார் படலையடிக்கு. அவர் வந்த இருவரையும் கூர்மையாகப் பார்த்தார். கரியமேனி, உழைத்துக் கறுத்து முறுக்கேறிய உடலமைப்பு. கை காலுக்கு ஒரு பாதிப்பும் இல்லை. ஆடைதான் அழுக்காயிருந்தது. மற்றப்படி ஒரு பிழையும் இல்லை.

'நீங்க ஊரில முந்தி என்ன செய்தநீங்க?' அவர் கேட்டார்.

'ஊரில தோட்டவேலைக்குப் போறநாங்க, கூலி வேலைக்குப் போறநாங்க. சொந்தவளவில நல்ல பயிர்பச்சைகள் எல்லாம் வைச்சிருந்தநாங்க. இப்ப இங்க வந்துதான் பிச்சை எடுக்கிறம், ஐயா!'

'ஏன் இங்கவந்து பிச்சை எடுக்கவேணும்? கைகாலுக்கு பிழை இல்லாமல் இருக்கக்குள்ள இங்க வந்தும் உழைச்சுப் பிழைக்கலாம்தானே? ஏற்பது இகழ்ச்சி.. நம்மப்போல ஒரு மனுசனிட்ட கையேந்துறது பெரிய கேவலம் எண்டு உணரவேணும்!.... நீங்க வீடுகள்ள போய் பிச்சை கேக்கக்கூடாது. வேலை இருக்கா எண்டுதான் கேக்கவேணும். வேலைசெய்து கிடைக்கிற கூலியக்கொண்டு சீவிக்கிற மனப்பக்குவம் வந்தால் காணும் உங்கட கஸ்டமெல்லாம் நீங்கும்' என்று கூறியவர் இருவர் முகத்தையும் கூர்மையாகப் பார்த்தார். அவர்கள் இவரை வியப்போடு பார்த்தனர்.

'சரி, வேல இருந்தா சொல்லுங்கையா நாங்க செய்வம்' இப்போது பத்மாவதியின் இதயம் குதூகலித்தது. அவள் கட்டளைகளைப் பிறப்பித்தாள்.

'உங்களுக்கேற்ற வேலதான் இங்க காத்துக் கிடக்குது. பின்வளவு அடிவளவெல்லாம் பத்தைகள் வளர்ந்து மூடிக்கிடக்குது. பத்தைகளை கொத்தி வெட்டி புடுங்கி துப்பரவாக்க வேணும். ஒரு புல் பூண்டும் இருக்கக்கூடாது. நிலம் தெரியவேணும்' என்று சொன்னவள், அவர்கள் வேலைசெய்ய வேண்டிய இடங்களைக் காட்டினாள். மண்வெட்டி, கத்தி குப்பைவாரி என்று உபகரணங்களையும் எடுத்துக்கொடுத்தாள். இரு பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதும் மீண்டும் பார்வையால் கணைதொடுத்தாள். வாளிப்பான உடல், மேனி மினுவென்றிருந்தது. ஆனால் கரியமேனி. இப்படியும் ஒரு கறுப்பா.

பத்மாவதிக்கு தளதள உடம்பு, சள்ளையும் கொள்ளையுமாயிருக்கும். ஆனால் செம்மாதுளை நிறம். மிருதுவாயிருக்கும். அவர்களைப் பார்த்த கண்கள் தன்னையும் பார்த்து அளவெடுத்து திருப்தி கண்டது. ஒருபெண் இன்னொரு பெண்ணைச் சந்திக்க நேர்ந்தால் முக்கியமாக அவதானிப்பது, அழகை அலங்காரத்தைத்தான்.

இருவரும் வரிந்து கட்டிக்கொண்டு ஆளொரு பக்கமாக நின்று தங்கள் வேலையைத் தொடங்கினர். முதலில் ஆயுதங்களைப் பாவிக்கவில்லை. குந்தியிருந்து பிடுங்கிச் பிடுங்கி எறிந்தனர். இடுங்க முடியாதவற்றுக்குத்தான் ஆயுதமெடுத்தனர். கையால் பிடுங்குவது வேரோடுவரும். இது ஆம்பிளைகள் மளமளவென்று கொத்தி எறிஞ்சு போட்டுப் போவாங்கள், கெதியாக பற்றை வளரும்.

இவர்கள் வேலை அவளுக்குத் திருப்தியைக் கொடுத்தது. தன் அலுவல்களை கவனிக்க அங்கிருந்து அகன்றுவிட்டாள். சற்று நேரத்தில் தேனீர் கொண்டுவந்து கொடுத்தாள். இருமாதரும் தேனீரை அருந்திவிட்டு, மடிச்சரையை எடுத்து வெற்றிலை போட்டுக்கொண்டு கருமமே கண்ணாயினர். சிறிது நேரத்தின்பின் வீட்டுக்காரி சாப்பாட்டுத் தட்டுடன் வந்தாள். அவர்கள் கையை அலம்பிக்கொண்டு நாறிப் பெருக்கோடு வேண்டிச் சாப்பிட்டனர். மீண்டும் வேலை தொடர்ந்தது. பத்மாவதி அடுக்களையுள் சங்கமமானாள். சிறிது நேரம் தான் சென்றிருக்கும், அந்தப் பெண்கள் பதறிக்கொண்டு அழைத்தனர்.

'அம்மா! இங்க கெதியா ஓடிவாங்கம்மா.. என்ன கிடக்கு எண்டு பாருங்கம்மா. பத்மாவதி விழுந்தடித்துக்கொண்டு ஓடினாள் அங்கு. ஆசிரியரும் வாசித்துக்கொண்டிருந்ததை வீசி எறிந்துவிட்டு பின் வாசலுக்கு வந்தார்.

'இந்தப்பட்ட மரத்துக்கு கீழ பட்டைக்குள்ள என்ன கிடக்குதெண்டு பாருங்கம்மா' அவர்கள் பெரும் குரலில் பேசினர். இவர்கள் பீதியில் விழித்தனர். 'பாம்போ, பூச்சிபட்டையோ, என்ன ஆபத்தோ'

மதில் சுவர் கட்டுவதற்காக எப்பவொ தறித்து விழுத்திய பெரிய வாகை மரமொன்று சரிந்து விழுந்துகிடந்தது, கரை ஒதுங்கிய திமிங்கிலம் போல. பட்டைகள் கிளம்பிக் கிடந்தன. அந்தப் பெண்கள் அடிப்பாகத்தைப் பூந்து கிடந்து காட்டினர்.

'இந்தப்பட்டைக் கோறைக்குள்ள தேன்கூடு கட்டியிருக்கம்மா' கொம்புத்தேனவிட இந்தக் கோறத்தேன்தான் அம்மா திறமானது.

'இதுதானா, நான் என்னமோ ஏதோவெண்டு பயந்துபோனன். அது தேன்பூச்சிகள் அதுர பாட்டில இருக்கட்டும் நீங்கள் ஏன் அதோட போறீங்கள். நீங்க உங்கட வேலயப்பாருங்க'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நாங்கள் எங்கட ஊரில இருக்கக்குள்ள காடுகள்ள திரிஞ்சி தேன் எடுக்கிற வேலயத்தான் கூடச்செய்த நாங்க. நாங்கள் வேடர்சாதி, இதுகள்ள நல்ல அனுபவம் இருக்குது' அவளைத் தொடர்ந்து மற்றவளும் பேசினாள்.

'இது பட்டத்தேன் நல்ல மதிப்பானது. இன்னும் ஒருமாதம் போக பதத்துக்கு வந்திடும். நாங்க வந்து எடுத்துத் தருவம், எங்களுக்குக் கூலியத் தந்தாக்காணும்'

'எங்களுக்குத் தேனும் வேணாம் ஒண்டும் வேணாம். இப்பிடி எங்கட வளவில எத்தின மரங்களில தேனீக்கள் கூடுகட்டும். பிறகு கூடு இருந்த சுவடும் இல்லாமல் போகும். நாங்கள் இத ஒண்டையும் கவனிக்கிற இல்ல. எங்களுக்குத் தேன் வேணுமெண்டால் கடையில வாங்கிற்றுப் போவம். தேன் கூட்டக் கலைக்கவும் வேணாம். அதுட்டக் குத்து வாங்கவும் வேணாம். எங்களுக்கு டெங்குக்காரர நினைச்சாத்தான் பயமாயிருக்கு. கெதியா வந்த வேலைய முடிச்சுத்தாங்கோ, புண்ணியம் கிடைக்கும்'

அவர்கள், அருமையை அறியாத எருமையைப் பார்ப்பதுபோல் ஏளனமாகவே பார்த்தனர். அவர்கள் வேலை மீண்டும் தொடர்ந்தது. வெயில் ஏறிக் கொண்டிருந்தது. இருவரும் சேலையால் மூடிக்கட்டிக் கொண்டு தம் பணியைத் தொடரலாயினர். அவர்கள் இப்படி எத்தனை பனியைக் குளிரை, வெயிலை வெக்கையை எல்லாம் கண்டு காடு கரம்பை எல்லாம் கண்டு நன்கு பழக்கப்பட்டுப் போனவர்கள். அவர்களை எதுவும் ஒன்றும் செய்யாது போலிருந்தது.

மதியம் ஒரு மணியிருக்கும். பத்மாவதி இருவரையும் சாப்பாட்டுக்கு அழைத்தாள். குழாயடியில் கழுவிக்கொண்டு வந்து சாப்பிடத் தயாராகினர். சாப்பிடும்போது ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து திருப்தி தெரிவித்தனர்.

நல்ல சாப்பாடுதான். சாப்பிட்டு முடிந்ததும் சற்று களையாறினர். வெற்றிலை போட்டுகொண்டனர். மீண்டும் துப்பரவுப்பணி துரிதமாக நடந்தது. ஆனால் அதிகநேரம் நீடிக்கவில்லை. அழைப்பாணை விடுத்தார்கள்.

'அம்மா.. அம்மா.. இனி எங்களால வேலைசெய்ய ஏலாது. அம்மா சரியாக களையாயிருக்கு அலுப்பாயிருக்கு, வீட்டபோய் இடுப்பச் சாய்க்க வேணும் போலயிருக்கு. அரைவாசிக்கு மேல துப்பரவு பண்ணிற்றம். இன்னும் கொஞ்சந்தான் இருக்கு. நாளையவிட்டு அடுத்தநாள் சனிக்கிழமை வந்து எல்லாவற்றையும் முடிச்சுப் போடுவம்'

'பின்னேரம் ஐந்துமணி மட்டும் வேலை செய்தால் முழுவேலையையும் முடிச்சிருக்கலாம். ம்..., என்ன செய்யுறது அதுகளும் என்னப்போல பொம்புளைகள்தானே. கடுமையா பாடுபட ஏலாதுதானே, அதுகளப் பார்த்தா பரிதாபமாத்தான் இருக்கு' என்று நினைத்துக்கொண்ட பத்மாவதி உள்ளே போனாள்.

ஆசிரியர் காசோடு ஆயத்தமாகவே நின்றார். மனைவியிடம் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் வேண்டிக்கொண்டு போய் இருவரிடமும் ஒவ்வொரு தாளைக்கொடுத்தாள். அவர்கள் தாள் காசை முகத்தின் முன்னால் பிடித்து படம் பார்த்தனர். ஒவ்வொன்றும் ஐநூறு ரூபாத்தாள். வியப்போடு பார்த்தனர். இந்தத் தாளைக் கண்டு கனகாலமாயிற்றோ என்னவோ. அவர்கள் முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது. 'அம்மாவுக்கு நல்ல மனசு' என்றே அவர்கள் மனது வாழ்த்தியிருக்கும்.

'எங்கட சீல சட்டையப் பாருங்கம்மா. எத்தினையோ இடத்தில கிழிஞ்சிருக்கு. தோய்ச்சா இன்னும் கிழிஞ்சி போயிரும் எண்டு அழுக்கானதத்தான் உடுத்துக்கொண்டு திரியிறம். நீங்க உடுத்தின சீலைகள் இருந்தாத் தாங்கம்மா பெரிய புண்ணியமாப் போகும்' இடம் கண்டால் விடுவார்களா? இரக்கும் புத்தி செருப்பால அடித்தாலும் போகாதுபோலும்.

'நீங்க வாற சனிக்கிழமை வருவீங்கதானே, மிச்ச வேலையையும் முடிச்சாப்பிறகு உடுத்துறதுக்கு நல்ல சீல நான் தருவன். இப்ப போயிற்று வாங்கோ' பத்மாவதி தாராளமனம் படைத்தவள். ஆனாலும் காரியக்கெட்டி. காலையில கணவன் கூறியதை ஞாபகப்படுத்தினாள். 'இரந்து கேட்கக்கூடாது. உழைச்சுத்தான் பெறவேண்டியதப் பெறவேண்டும்'

இதைக்கேட்டு அவர்கள் முகம் சுருங்கியது. ஆனாலும் காட்டிக்கொள்ளவில்லை. 'அம்மா மகராசியா இருக்கவேணும். நாங்க போயிற்று நாளையண்டைக்கு கட்டாயம் வந்து மிச்ச வேலைய முடிச்சுத்தாறம்' அவர்கள் முறைப்படி விடைபெற்றுப் போயினர். இந்தப் பண்பாடு பேணலில் மட்டும் ஒன்றும் குறைச்சலில்லை.

இரண்டாம் நாள் சனிக்கிழமை வந்தது. இவர்கள் ஆயத்தமுடன் காத்திருந்தனர். பத்மாவதி அவர்களுக்குக் கொடுப்பதற்காக சீலை சட்டைகளையும் எடுத்து வைத்திருந்து, கூட சமைப்பதற்கான ஆயத்தங்களையும் செய்திருந்தாள். ஆனால் அவர்களை அன்று முழுவதும் காணவில்லை. அடுத்தடுத்த நாட்களிலும் எதிர்பார்த்திருந்தனர். 'அம்மா' என்ற குரலைக்கேட்க முடியவில்லை. படலை திறக்கும் சத்தம் கேட்கும் போதெல்லாம் இவர்கள் விழிகள் அவர்களையே எதிர்பார்த்தது. யார் யாரோவெல்லாம் வந்துபோயினர். அவர்கள் வரவே இல்லை.

'அவங்கள் ஏன் வரஇல்ல? சரியாத்தானே சம்பளம் குடுத்தம். சாப்பாடும் குடுத்தம். முழுவேலையையும் முடிச்சால் இன்னும் எவ்வளவோ குடுக்க இருந்தம். ஏன் வராமல் போனாங்கள் நாங்கள் என்ன குறைவிட்டம்?' பத்மாவதி பரிதவித்தாள்.

சிவப்பிரகாசம் சிரித்துக்கொண்டு சொன்னார். 'பிச்சையெடுத்து இரந்துண்டு சுகம் கண்டவர்கள். பாடுபட்டு உடலை வருத்தி உழைத்து நல்லா வாற வழியைப் பற்றி கிஞ்சித்தும் சிந்தித்துப் பார்க்கமாட்டார்கள்'. சொன்ன ஆசிரியர் மடித்துக் கட்டிக்கொண்டு துப்பரவுப் பணியில் ஈடுபடலானார்!!!

(யாவும் கற்பனையல்ல)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நதியின் பயணம்

வாழ்க்கை பயண, வளைவு நெளிவுகளுக்கு
வரைவிலக்கணமாகி,
வரட்டு கௌரவம் பேசி, 'வாளா'யிருக்கும்
அடர்நிலத்தை அகழ்ந்து விளைநிலமாக்கி,
வசந்தத்தின் செய்திகளை,
வழியெங்கும் பரப்பிக்கொண்டு
விரையும் பயணம் ஆழி நோக்கி!

அவசரமாக துள்ளி வரும்
கானோடைகளையும்,
அண்மித்து அடங்கிவரும்
அருவிகளையும்,
அன்பாய் அணைத்து,
துணிவாய் நகரும்
இடைவேளையில்லாமல்!

தலை தாழ்த்தி நன்றி கூறும்
கரை விருட்சங்கள்!

இசைந்து பாடும் காற்றுடன்
நர்த்தனமாக
வரவேற்புக் கூறும் நாற்றுக்கள்!

இயற்கையின் வனப்பிற்கு
வர்ணந்தீட்டும் தூரிகையாக
என்னோட்டமும், இசைவுகளும்..

நேசமாய்
நேர்காணல் செய்யக் காத்திருக்கும்,
கடற்கரையோர தாழை மரங்களுடன்
கைக்குலுக்கி,
முத்துக்கள் தூவும்,
அலைமகளின் மடியில்
நித்தியமாய் கலந்து,
செல்வங்களை செம்மைப்படுத்தும்
பணியதில் இணைப்பு..

முகவரிகள் முழுவதுமாக மாறி
முதுசங்கள் காக்கும் பொறுப்பிலே
கரைந்திடும் காலங்கள்!!!

● பதுளை பாஹிரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகர வீதிகளில் நதிப் பிரவாகம் கவிதைத் தொகுதி

## நூல் மதிப்பீடு

நிலாக்குயில்




ஜீவநதியின் 31 ஆவது வெளியீடாக 100 பக்கங்களை உள்ளடக்கியதாக கவிஞர் ஷெல்லிதாசனின் நகர வீதிகளில் நதிப் பிரவாகம் என்ற கவிதைத் தொகுதி வெளிவந்துள்ளது. இந்தக் கவிதைத் தொதியானது கவிஞர் ஷெல்லிதாசன் அவர்களின் இரண்டாவது கவிதைத் தொகுதியாகும். இவரது முதலாவது கவிதைத் தொகுதியான செம்மாதுளம்பூ 2010 இல் வெளிவந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளரும், சட்டத்துறைத் தலைவருமான கலாநிதி த. கலாமணி அவர்கள் தனது முன்னுரையில் "1970 களின் பிற்கூறுகளில், தொழில்நுட்பக் கல்லூரி மாணவனாக இருந்த வேளை கவிதை எழுதத் தொடங்கிய ஷெல்லிதாசனின் நாற்பதாண்டு கால அறுவடைகள் 2010 இலேயே வெளிவர முடிந்தது என்ற ஆதங்கநிலை கடந்து, அதன் பின்பான மூன்றாண்டுகளில் அவர் எழுதிய படைப்புக்களின் தொகுப்பான இந்நூலின் வரவானது, கவிஞர் ஷெல்லிதாசனின் நிதானமான பார்வையையும், முற்போக்குச் சிந்தனைகளில் அவர் கொண்ட பற்றுறுதியையும் சமகால நடப்புகளைத் தீர்க்கமாக நுனித்தாயும் அவரது ஆற்றலையும் பதிவு செய்ய ஏதுவாகின்றது. ஈழத்து இடதுசாரி முன்னோடிகளில் முக்கியமானவராகக் கொள்ளப்படும் தோழர் மு.கார்த்கேசன் அவர்களின் அரசியல் வகுப்புக்களின் பால் ஈர்க்கப்பட்டு, இடதுசாரிச் சிந்தனைகளில் பயிற்சி பெற்று, இடதுசாரி இயக்கத் தோழர்களான கே. டானியல், இளங்கீரன், யோ. பெனடிக்ற் பாலன் போன்ற படைப்பாளியாக வரவேண்டும் என்ற தன்னார்வத்தை வளர்த்துக்கொண்டவர் கவிஞர் ஷெல்லிதாசன்" என்கிறார்.

இந்த நூலை, மக்கள் கவிஞனாகத் திகழ்ந்த சில்லையூர் செல்வராசன் அவர்களின் 18 ஆவது நினைவு தினத்தை நினைவுறுத்தி அன்னாருக்கு சமர்ப்பிப்பதில் கவிஞர் ஷெல்லிதாசன் மன நிறைவுகொள்கிறார்.

கவிஞர் தனதுரையில் "அன்றாடம் எனது உணர்வுத் திரையில் பிம்பங்களாக விழுந்த செய்திகள், காட்சிப் படிமங்கள், அவற்றினூடாக நான் பெற்ற அனுபவங்கள் நகர வீதிகளில் நதிப் பிரவாகமாக அங்கு உங்களது கைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவழுகின்றது. பல்வேறுபட்ட தன்மைகளை உள்ளடக்கிய கவிதைகளாக இவை அமைந்தாலும், மனித சமூகங்களிடையே புரையோடிப் போயிருக்கும் இன, மத, மொழி, சாதிய வேறுபாடுகள், அடக்குமுறைகள் என்பவற்றிற்கு எதிராக ஏதோ ஒரு விதத்தில் இவை பங்களிப்புச் செய்வதாகவே நான் நம்புகின்றேன்'' என்கிறார்.

இடதுசாரிச் சிந்தனைகள்தான் அவரின் கவிதைகளின் ஊற்றுக் கண்ணாக விளங்குகின்றன என்பதை இந்தத் தொகுப்பிலுள்ள பல கவிதைகள் கட்டியம் கூறுகின்றன. மிகவும் இலகுவான மொழி நடையைக் கையாண்டு காத்திரமான முறையில் தனது கருத்துக்களை கவிதை வடிவில் கவிஞர் ஷெல்லிதாசன் அழகாக இந்தத் தொகுதியில் பதிவு செய்துள்ளார். இந்தத் தொகுதியில் 69 கவிதைகள் உள்ளன.

கண்ணில் ஒரு கங்கையாறு (பக்கம் 03) என்ற கவிதையானது மூதூரைச் சேர்ந்த சகோதரி ரிஸானா நபீக் பற்றிய பதிவை விதைத்துச் செல்கின்றது. குடும்ப நலன் கருதி தன் தலையை அடமானம் வைத்த அவளது தியாகம் உலகத்தையே கதிகலங்கச் செய்ததொன்று. அவளுக்கான மரண தண்டனை விதிக்கப்பட்டு விதியின் கைகளுக்குள் அவள் மூச்சடங்கிவிட்டபின், இலங்கையில் அவளது குடும்பத்தினருக்காக வீடு கட்டிக்கொடுக்கப்பட்டது. உதவிகள் செய்யப்பட்டன. ஆனால் இவை எதுவுமே ரிஸானா என்ற தனியொருத்திக்கு ஈடாகாது என்பது யாவரும் அறிந்த உண்மை. ரிஸானாவைப் பற்றின கவிஞரின் பார்வை இவ்வாறு பதிவாகியிருப்பதை அவதானிக்கலாம்.

பாலை நிலத்தில்
கானல் நீரை
பருக விரைந்த மான்குட்டி

கங்கையாற்று வெள்ளம்
கரை புரள்கிறது கண்களில்
உனது சிரசு கொய்து
உயிர் உருவிய
அரபுச் சீமான்களின்
அபார மனதாபிமானத்தால்..

புனிதத்தைப் போற்றும் நிலங்கள்
மனிதத்தையும் மகிமைப்படுத்துமென
மனப்பால் குடிக்கும்
மடைத்தனம் - இந்த .
மண்ணுக்கே உரியது.

நோட்டுக்களின் நோட்டம் (பக்கம் 05) என்ற கவிதையானது இன்று புழக்கத்தில் இருக்கின்ற நோட்டுக்களைப் பற்றி பேசியிருக்கின்றது. வர்ணமயமான நோட்டுக்கள் இன்று அச்சடிக்கப்பட்டு வந்தாலும், அவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுமதி குறைந்தே காணப்படுகின்றது. சில்லறை நாணயங்கள் கவிதையில் சொன்னாற்போல உண்டியல்களில்கூட காணக்கிடைப்பதில்லை. பொதுவாகப் பார்த்தால் சில வருடங்களுக்கு முன்பு ஆயிரம் ரூபாய் காணப்பட்டால் ஒரு நாளைக்கான அத்தியவசியப் பொருட்களை வாங்க அது போதுமானதாக இருக்கும். இன்றைய நிலைமையில் ஒரு பால் மா பைக்கற்றை வாங்கிவிட்டால் ஆயிரம் ரூபாயும் முடிந்து போகும். பணத்தின் பெறுமதியானது குறைந்து வரும் இக்காலத்தில் விலைவாசி மாத்திரம் ஏறிக்கொண்டே செல்வதுதான் வாடிக்கையானதும், வேடிக்கையானதுமான விடயமாகும்.

மரியாதை முகவரியை
இழந்து தவிக்கும்
மனித உரிமைகளைப் போல
கரன்சி நோட்டுக்களின் மதிப்புக்களும்
கடுகதி வேகத்தில் சரிந்தபடி

காணாமற் போய்விட்ட
நீதியாக
சதங்களின் சலசலப்பை
உண்டியல்களில் கூட
காணமுடியவில்லை..
துடுப்பாட்டத்தில் மட்டும்
சதம் - தனது பெயர
உச்சரிக்கப்படுவதைக் கேட்டு
உள்ளூர ஆனந்தப்படுகிறது..

ஆயிரமான மயில் நோட்டின்
ஆட்டமும் உரு மாறியபோதும்
சந்தைக்குப் போனால்
ஒரு பொலித்தீன் பையில்
அடக்கமாகிவிடுகிறது..

இன்றைய வாழ்க்கையில் மனிதர்களிடம் மனிதநேயம் என்ற விடயம் மரித்துப்போய் காணப்படுகின்றது. காசுக்காக எதையும் செய்ய விளைபவர்கள் ஒரு மனிதனின் துன்பத்திற்குக்கூட உதவும் மனப்பாங்கு அற்றவர்களாகவே வாழ்கின்றார்கள். பண்பும், பாசமும் இன்று விலைமதிப்பில்லாமல் போய்விட்டது. செயற்கையாகப் பழகும் தன்மையே இன்று எம் சமூகத்தினர் மத்தியில் புரையோடிப் போயிருப்பது அவதானத்திற்குரியது. இன்றைய சமூகத்தில் முனைப்பு பெற்றிருக்கும் இத்தகைய சிந்தனைகள் மனிதம் என்ற செல்நெறியிலிருந்து அனைவரையும் மாற்றியிருக்கின்றது என்பது நிதர்சனத்துக்குரியது. அந்தப் பண்புகளை மண் புதைத்த மனிதங்கள் (பக்கம் 11) என்ற கவிதை சுட்டிநிற்கின்றது.

குடிதானிருக்கு குடித்தனத்தைக் காணவில்லை சில குடும்பங்களில்..
அடிதானிருக்கு அன்பு பாசம் காணவில்லை பலர் வாழ்க்கையிலே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணந்தானிருக்கு பண்பு அங்கு பறந்து போச்சு காற்றினிலே.. படிப்புதானிருக்கு பகுத்தறிவைக் காணவில்லை சிலர் நடத்தையிலே.. பதவிப்படி ஏற ஏற பாறாங் கல்லின் கனமும் உடனேறிக் கொள்கிறது கனவான்களின் உச்சியிலே.. பசையிருந்தால் மட்டுமே அண்ணன் தம்பி உறவும் ஒட்டுகிறது பெரும் பாசத்திலே.. அசையும் அசையாச் சொத்துக்களையும் அந்தஸ்துக்களையும் ஆராய்ந்தே சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்ட திருமணங்கள் கூட இன்று நிச்சயமாக்கப்படுகின்றன எமது இல்லங்களிலே..

அடிமையின் மோகம் (பக்கம் 15) என்ற கவிதையானது அடக்குமுறைக்கு எதிரான ஒரு கவிதையாக நோக்கத்தக்கது. இன்றைய சமுதாயத்தில் நலிவுற்றவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் வியூகங்கள் கொஞ்சநஞ்சமல்ல. ஒரு இனம் சார்ந்து அல்லது ஒரு மொழி சார்ந்து எழுகின்ற சில போக்குகள் அடிமட்ட மக்களின் வாழ்க்கையை மாத்திரமன்றி பணம் படைத்தவர்களிடையேயும் தாக்கம் செலுத்திவிடுகின்றது. இன, மத, குலம் போன்றவற்றைத் தவிர்த்து மனிதம் என்ற வட்டத்துக்குள் வைத்து எலலோரையும் நோக்கும் சமத்துவம் பேணப்படுமானால் நாட்டில் ஏற்பட்டுள்ள இனங்களுக்கு இடையேயான முரண்பாடுகள் வலுவற்றதாகிப் போய்விடக்கூடிய சாத்தியப்பாடுகள் அதிகரிக்கும். கீழுள்ள அடிகளில் தொழிலாளி வர்க்கத்தின் ஏக்கத்தையும் காண முடிகின்றது.

குதிரையாய் கழுதையாய்
முதுகினைக் கொடுத்தோம்
சவாரிகள் நடக்குதடா

அவர்
கொடுப்பதை உண்டு
அடிப்பதை வாங்கி
அடிமைச் சீவியம் தொடருதடா

மலையில் ஒரு பனித்திரை (பக்கம் 27) என்ற கவிதையானது மலையக மக்களின் வாழ்வு குறித்து பேசியிருக்கின்றது. தேயிலை மலையில் காலநிலைக் குளிராலும், சுட்டெரிக்கும் வெயிலினாலும் பாதிக்கப்பட்டாலும் அவர்கள் சுமக்கின்ற பாரத்துக்கான கூலிச் சம்பளமோ மிகக்குறைவுதான். மலையக மக்கள் என்றால் ஒடுக்கப்பட்ட சமூகத்தினராக கருதி வந்த காலம், தற்போதைய இளைஞர் யுவதிகளின் கல்வியறிவினால் மாற்றப்பட்டு வருகின்றது என்பது மகிழ்ச்சிக்குரிய விடயம். எனினும் அவர்களின் யதார்த்த வாழ்வியலை நோக்கும்போது அன்றாட செலவுகளையே சமாளிக்க முடியாமல் அவர்கள் திண்டாடுகின்றனர். துரைமார்களோ சுகபோக வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருக்க, தொழிலாளர்களின் பாடு அந்தோகதியாகத்தான் இன்னமும் இருக்கின்றது என்பதை கீழுள்ள வரிகள் தொட்டுக்காட்டியிருக்கின்றமை மனவேதனையைத் தரும் ஒன்றாகவே காணப்படுகின்றது.

நானோ திருமலையில்
நீயோ தேயிலை மலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் நிலையைக் கண்டு
எனது மனோ நிலையோ
ஒரு நிலையிலில்லை தோழா

இருவருக்கும் சுதந்திரம்
ஏனோ கேள்விக் குறிதான்
இருவருமே பேசுமொழி
இன்பத் தமிழே அதனாலேதான்

ஐயாமார் சம்பளத்தில்
ஐந்து வீதமும் உனக்கில்லை நீ
கொய்யாமல் இருந்துவிட்டால் நாளை
குடி மூழ்கும் தேசமடா

அடிமைச் சீவியத்தை
அடி வருடி உனக்களித்து
பெருமை பேசுபவர்
பெருந்தவறை (நீ) உணர்வதெப்போ?

மனம்விட்டுச் சிரிக்க வா (பக்கம் 99) என்ற கவிதையானது சிரிப்பின் மகத்துவத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருக்கின்றது. அழகான புன்னகை ஒன்றின் மூலம் பல விடயங்களை சாதிக்க முடியும். ஆறுதல் கேட்டு தவித்திருக்கும் ஒரு இதயத்துக்கு அன்பானவரின் புன்னகை ஒன்றே மருந்தாக ஆகிவிடுகின்றது. ஆனால் ஏழையின் சிரிப்பை வறுமை இல்லாமலாக்குகின்றது. கன்னியரின் சிரிப்பை சீதனம் பறித்துக்கொள்கின்றது. கஷ்டப்பட்டு உழைக்கும் தொழிலாளியின் சிரிப்பை முதலாளிவர்க்கம் இல்லாமலாக்குகின்றது. இப்படி சிரிப்புகூட இன்று பணத்தில்தான் தங்கியிருக்கின்றது என்ற பேருண்மையை இக்கவிதை சொல்லி நிற்கின்றது.

சிரிக்காமலிருந்த நாள் பாழென ஆகுமாம்.. செம்மையாய் வாழ்ந்திட சிரித்திட வேண்டுமாம்.. அகத்தினிலே இருந்தெழும் புன்னகை மலர்களால் ஆனதான நோய்களும் அகன்றேதான் ஓடுமாம்..

ஏழையின் சிரிப்பதை இல்லாமை பறித்தது.. இருப்பவன் சிரிப்பதை, அவன் இருப்பு அதே பறித்தது.. கன்னியர் சிரிப்பினை சீதனம் பறித்தது.. காளையர் சிரிப்பதை காவலும் தடுத்தது.. உழைப்பவன் சிரிப்பினை உறிஞ்சுவோன் பறித்தனன்.. உயர்ந்தவன் சிரிப்பதை பொய்மையும் மறைத்தது..

மமதையில் இங்கே மத யானை சிரிக்குது.. மடிகளை நிரப்பியே மந்திகள் சிரிக்குது.. ஏமாற்றி உள்ளுர நரிகளும் சிரிக்குது.. இடையிடை ஓநாயும் சேர்ந்தேதான் சிரிக்குது.. கழுகுகள் பிணங்களைக் கொத்தியே சிரிக்குது.. கலர்களை மாற்றியே பச்சோந்தி சிரிக்குது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனைத்தவிர இங்கு எல்லாமே சிரிக்குது.. அவன் மனம்விட்டுச் சிரிக்கின்ற நாள் எந்த நாளோ?

இலங்கையின் மூத்த கவிஞர்கள் வரிசையில் அழியாத நாமம் கவிஞர் ஷெல்லிதாசனுக்கும் உரியது. மனிதநேயம் சார்ந்த அவரது சிந்தனைகள் கவிதை வழியே பிரவாகிக்கின்றன. இளைய எழுத்தாளர்கள் இக்கவிஞரின் நூலை படிப்பதன் மூலம் தங்களது இலக்கியப் பாதையில் வெற்றி பெறலாம் என்பதற்கு இவரது கவிதைகள் தக்க சான்றாக அமைகின்றன. கவிஞர் ஷெல்லிதாசனுக்கு எனது வாழ்த்துக்கள்!!!

நூல் - நகர வீதிகளில் நதிப் பிரவாகம்
நூல் வகை - கவிதை
நூலாசிரியர் - ஷெல்லிதாசன்
வெளியீடு - ஜீவநதி
விலை - 250 ரூபாய்

---

# துண்டாடப்படுதல்

பட்ட மரமொன்று
தழைக்க நினைக்கிறது..
கெட்ட கனவென்று
அதைக் கிடப்பில்
வைக்கிறது!

அடுப்பங்கரை
தாண்ட வந்த உணர்வுகள்
அங்கேயே
சுருண்டு கிடக்கிறது!
அதற்குள்ளும் ஒரு சுகம்
பாய் விரித்துக் கொடுக்கிறது!

பறந்து திரியும் ஆசை
அங்கே
சிறகு கட்டிக் கொடுக்கிறது!
இறந்து போன மனசு - அதை
ஏற்க மறுக்கிறது!

வாழ்தலுக்கான வேட்கை
மனதில்
திராணியற்றுப் போகிறது..
துடித்தெழும் சக்தி
அதனால்
துண்டாடப்படுகிறது!!!

● கலாபூஷணம் பி.ரி. அஸீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பீராக

நிலையிலா நிலத்தைப் படைத்த
நிலையானவன் நிறைக்களித்த
முதல் முறை(க்)கட்டளை
'வாசிப்பீராக!'
இதையறிந்த நிழல் மனிதா! - நீ
இதுகுறித்து
இம்மியளவு சிந்தித்ததுண்டா?

சிந்தித்தால்..
என் சில வார்த்தைகள்
உன்னைச் சந்திக்கும்!

வாசித்தல்
பொழுதுபோக்கென்று
எண்ணி வாழுதல்
உண்ணுதலை
பொழுதுபோக்கென்று
கூறுவதைப் போலுள்ளதே!

இன்றியமையாத
இரையுட்கொள்ளலை
அவ்வப்போது செய்யும்
உன் பொழுதுபோக்கிற்கு
இணையாக்குவது முறையா?

ஆதலால்
எம் கருத்தில் நிற்க
கருத்தூன்றி
வான்மறையை வாசிப்போம்
வள்ளல் நபியை நேசிப்போம்
வல்லவன் பெயரை சுவாசிப்போம்
இருமையும் சிறக்க
இறையோன் வசம்
என்றென்றும் யாசிப்போம்!!!

● எம்.எஸ்.எம். சப்ரி
பூவெலிகட

# காதல்

உள்ளங்கள்
உரசிக்கொள்வதால்
உயிரில் எழும் தீ...
இந்தத் தீயால்
வாழ்வில் சிலருக்கு ஒளி
பலருக்கு வலி!

வலிகளுணர்ந்த காதலே
வலிமையான
காதலென
வரலாறு பேசுவதால்
காதலின் சின்னங்கள் பல
கல்லறைகளாய் உள்ளன!!!

# புது விதி

நம்பிவந்த தமயந்தியை
நடுக்காட்டில்
விட்டுச்சென்ற நளனும்...
சுத்தமான சீதையை
சுட்டெரிக்கும் தீயில்
குளிக்கச் சொன்ன இராமனும்
வாழ்ந்த காவிய காலம் முதல்...

பொன்னகையால் புன்னகையை
தொலைத்து நிற்கும்
நங்கையர் நலிந்து வாழும்
நவீன காலம்வரை...

கண்ணீர் மட்டுமே கன்னியர்க்கு
கதியெனும் நிலைமாறி
வருங்காலங்களாவது
வசந்தம் மட்டுமே
வனிதையரின் வாழ்வென்று
புது விதி தோன்றாதோ???

● வவுனியா சுகந்தினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரைத் தாவிச் செல்லும் வண்டு

## குறுங்கதை

ஜெனீரா ஹைருல் அமான்
- கிண்ணியா

திருமண வீட்டிலும், மரண வீட்டிலும் உறவினர்கள், நண்பர்கள், சொந்தக்காரர்கள், தெரிந்தவர், தெரியாதவர் எனப் பலரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கும். அந்தவகையில் பல வருடங்களின் பின்னர், திருமண வீட்டில் பஸ்மியாவைச் சந்தித்தாள் ஹும்னா.

சுகம் விசாரிப்புகளுடன், தனக்கேற்பட்ட கசப்புணர்வுகளையும் பகிர்ந்துகொண்டாள் பஸ்மியா.

'நான் இரண்டு வருடங்களாகச் சுகவீனமுற்று, எழுந்து நடக்க முடியாமல் படுத்த படுக்கையாக இருந்தேன். உயிர் பிழைப்பேன் என்று யாரும் நினைக்கவில்லை. இப்போது அல்லாஹ்வின் அருளால் நல்ல சுகம். முன்பு எந்த நிலையில் இருந்தேனோ அதே நிலைக்கு வந்துவிட்டேன்'.

'ஆ... அப்படியா....?'

'உண்மையில் நீங்கள் சுகயீனமுற்ற விடயம் எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் கட்டாயம் வந்து பார்த்திருப்பேன்' என்றாள் ஹும்னா.

'என்ன செய்ய...? எனது கணவன் என்னைப் பிரிந்து வேறு கலியாணம் முடித்துவிட்டார். நான் எந்தத் தவறும் செய்யவில்லை. மனிதனுக்கு நோய் சொல்லிக் கொண்டா வரும்..? அதற்குள் இப்படி ஒரு தண்டனையா..?' தன் தலைவிதியை நொந்துகொண்டாள் பஸ்மியா.

எமக்குத் திருமணம் முடிந்து பத்து வருடங்களாகின்றன. எங்களுக்குள் சிறு பிரச்சினைகூட எழுந்ததில்லை. நாம் ஒருவரை ஒருவர் மனப்பூர்வமாக நேசித்தே திருமணம் செய்துகொண்டோம். 05 வருடங்கள் கொழும்பில் வசித்துவந்தோம். வீட்டுக்கு நண்பர்களை அழைத்து வரும் போதெல்லாம், நடுநிசி என்றும் பாராது சமைத்துப் போடுவேன். அவருடைய குடும்பத்தை அன்போடு வரவேற்று உபசரித்தேன்.

'எனக்கு வாய்த்த மனைவி போல் யாருக்கும் கிடைக்காது' என்று அடிக்கடி புகழ்ந்து தள்ளுவார். நானும் அவர் விருப்பத்துக்கேற்பவே நடந்துகொள்வேன். இப்படியிருக்கையில் ஒரு சந்தர்ப்பத்தில் அவர், வெளிநாடுகளுக்குப் பெண்களை அனுப்பும் தொழிலில் ஈடுபட்டார். நேரம் தாழ்த்தியே வீட்டுக்கு வருவார். ஏன் இப்படி சுணங்கி வருகிறீர்கள் என்று ஒரு வார்த்தை கூடக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டதில்லை. அவர் மீது அவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தேன். அவர் மீது எனக்கு எவ்வித சந்தேகமும் ஏற்பட்டதில்லை.

ஒரு நாள் இரவு சமைத்துக் கொண்டிருக்கும் போது தலை சுற்றிக் கீழே விழுந்தேன். அதன் பின் என்னால் எழுந்து நடமாட முடியவில்லை. படுக்கையிலேயே சேலைன் வழங்கப்பட்டது. எவ்வளவோ செய்தும் பலனளிக்கவில்லை.

எனது நோய்க்காக இருந்த பணம், நகை எல்லாம் விற்கப்பட்டது. இறுதியில் என்னிடம் எதுவுமில்லை. வாழ்வார் போலிருப்பார் சாவார். சாவார் போலிருப்பார் வாழ்வார் என்று சும்மாவா சொன்னார்கள்...? தெய்வாதீனமாக நானும் உயிர் தப்பிவிட்டேன். ஆனாலும் அதிர்ச்சியே எனக்குக் காத்திருந்தது. எனது கணவன் கண்டியில் ஒரு பெண்ணைத் திருமணம் முடித்து, ஒரு குழந்தையும் இருப்பதாக அறிந்தேன். எனது நோய், அவருக்குத் திருமணம் செய்யச் சாதகமாக அமைந்துவிட்டது. இன்பத்தில் பங்கெடுத்த அவர் துன்பத்தில் பங்கெடுக்காது நட்டாற்றில் கைவிட்டுவிட்டார். இந்நிலை வேறு எந்தப் பெண்ணுக்கும் வரவே கூடாது.

நான் நோயிலிருக்கும் போதே அல்லாஹ் என்னை மௌத்தாக்கி இருக்கலாம். இக் கொடுமையை அனுபவிக்கவா உயிருடன் வைத்திருக்கிறான்..? பஸ்மியாவின் விரக்தி நிறைந்த பேச்சைக் கேட்கும் போது ஹம்னாவின் உள்ளம் உருகியது.

'பொறுமையாளர்களுடன் அல்லாஹ் இருக்கிறான். உங்களுக்கு அநியாயம் செய்துவிட்டதை நினைத்து வருந்துவார். முதல் மனைவிக்குப் பிறகு தான் இரண்டாவது மனைவி. எப்படியும் உங்கள் காலடியில் விழுவார்' என்று பஸ்மியாவின் உள்ளத்தில் கொழுந்துவிட்டெரியும் தீயை ஆறுதல் வார்த்தைகளால் அணைத்தாள் ஹம்னா!!!

## வாசகர் கவனத்திற்கு

சந்தாதாரராக இணைந்து கொள்ளுங்கள். அது பூங்காவனம் சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவதையும், கிடைப்பதையும் உறுதி செய்யும். சந்தாதாரராக இணைந்து கொள்பவர்கள் ஆகக் குறைந்தது 600/= ரூபாவை சந்தாவாக செலுத்தவும். பக்கச்சார்பற்ற முறையில் எழுதப்பட்ட, தெளிவான கையெழுத்தில் அமைந்த, இதுவரை பிரசுரமாகாத (சிறுகதைகள், இலக்கியக் கட்டுரைகள் A4 தாளில் 03 பக்கங்களுக்குள்) ஆக்கங்களையே பூங்காவனம் எதிர்பார்க்கிறது. பூங்காவனம் இதழில் விளம்பரங்களைப் பிரசுரிக்க மற்றும் கொடுப்பனவுகள், சந்தா, விற்பனை முகவர்களின் தொடர்புகள் ஆகியவற்றுக்கு 077 5009 222 என்ற தொலைபேசி

ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை சோதனை

வெள்ளக் கொடூரம் வாட்டி வதைத்தது
வெள்ளத்தால் அனைத்தும் கொள்ளையிடப்பட்டன..
ஏன்? ஒரு சில உயிர்கள் கூட
கரை ஓரப் பிரதேசம் சுற்றிவரவும் வீடுவாசலில்
பொருள் பண்டம் எல்லாம் இழந்தனர்!

சொத்து சுகம் அனைத்தும் பறிமுதலாச்சு
மத்தியில் - மேட்டிலுள்ளோர் தப்பினர்..
அனர்த்தம் எமக்கில்லை நாம் தூயவர்கள்
அவன் - இறைவன் குற்றவாளிகளைத்தான் தண்டித்தான்
அவ்வாறு சிந்தித்து வாளாயிருப்பதா?
இறைவனின் எச்சரிக்கை பாதிப்புற்றோர்க்கு மாத்திரமா?

மத்தியில் உள்ளவர்கள், கண்ணால் காண்பவர்கள்
மற்றோர்க்கும் இவ்வெச்சரிக்கையை இறைவன் விட்டான்
நாளை நில நடுக்கம், எரிமலை, சூறாவளி, இனக் கலவரம்
நமக்கென இறைவன் விட யாது ஆயிடும்?

நாம் எச்சரிக்கையை ஏற்று ஆகவேண்டும்..
நம்மைப் போன்றோர் பாதிப்புற்றார்கள் அவர்களுக்கு
நம்மால் முடிந்த உதவிகள் புரியப்பட வேண்டும்.
நாமும் அத்துன்பத்தில் பங்குகொள்ளல் அத்தியாவசியம்!

நாம் நல்லவர் - நாம் தப்பினோம் என்று
மனப்பால் குடிக்க வேண்டாம்..
இறைவனின் எச்சரிக்கையைப் பொதுவாக ஏற்றல் அவசியம்..
இறைவனை இறைஞ்சித் துதிப்போம்..
மற்றோர்க்கு உதவிகள் புரிவோம்..
மட்டில்லாத் துன்பம் அடைந்தோர் துயர் துடைப்போம்..
வாழ்நாளில் நல்லன செய்ய இலட்சியம் கொள்வோம்..
இறைவா! எமக்கு அருள் பாலிப்பாயாக!!!

● வெலிப்பன்னை அத்தாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூங்காவனம் பற்றி வாசகர்கள்

பூங்காவனம் 17 ஆவது இதழ் கிடைத்தது. அதில் பொதிந்திருந்த அத்தனை அம்சங்களும் மனதைக் கவர்வனவாக இருக்கின்றன. கவிஞர் ஏ. இக்பால் அவர்களின் இலக்கிய அனுபவ அலசல் என்ற தொடர் மிகவும் சுவாரஷ்யமாக வெளிவந்துகொண்டிருக்கின்றது. திருமதி கெக்கிறாவ ஸுலைஹா அவர்களின் நேர்காணலினூடாக அவரது எழுத்தாக்க திறமை மட்டுமல்லாது மொழிபெயர்ப்பு ஆற்றல் பற்றியும் அறியத் தந்திருந்தமை அவரது ஆளுமைக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றது.

மற்றும் இதழில் வெளிவந்திருந்த கவிதைகள், சிறுகதைகள் வாசகர் கவனத்தை ஈர்ப்பனவாக இருக்கின்றதுடன், புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் எழுத்தாளர் அறிமுகம் என்ற பகுதியும் வரவேற்புக்குரியது!!!

மு. சதீஷ் - யாழ்ப்பாணம்

கெகிறாவ ஸுலைஹாவின் அட்டைப்படம் ஏந்தி வெளிவந்த பூங்காவனம் இதழ் என் பார்வைக்குக் கிட்டியது. மொழிபெயர்ப்புத் துறையில் கணிசமான பங்களிப்பை செய்து கொண்டிருக்கும் ஸுலைஹா அவர்களை ஏற்கனவே பெயரளவில் அறிந்திருந்தாலும், பூங்காவனம் இதழினூடாக அவர் பற்றிய முழுத் தகவலையும் அறிந்ததில் மிக்க மகிழ்ச்சி. நம் தேசத்தில் எழுத்தாளர்களாக ஆண்களே நிறையப் பேர் இருக்கின்றனர். விரல் விட்டு எண்ணக்கூடியளவு சொற்ப தொகையினரே பெண்களுக்குள் இனங்காணப்படுகின்றார்கள். அந்த வகையில் கெகிறாவ ஸுலைஹா அவர்கள் தொடர்ந்தும் இலக்கியத் துறையில் தனது பங்களிப்பை நல்கி வருவது பாராட்டிற்குரியது. ஆங்கிலப் புலமையுள்ள அவர் ஆங்கில நாவல்கள், சிறுகதைகளையும் மொழிபெயர்த்து பூங்காவனம் வாசகர்களின் வாசிப்புக்குத் தர வேண்டும் என்பது எனது ஆவல். அவரை நேர்கண்ட பூங்காவனம் இதழ் என்றும் பாராட்டுக்குரியது!!!

ஏ.ஆர். பாத்திமா ஷாமிலா - கண்டி.

மூத்த பெண் எழுத்தாளர்களைப் போற்றும் பூங்காவனம் புதிய எழுத்தாளர்களையும் இலக்கிய உலகத்திற்குள் அழைத்து வருவதில் பெருமகிழ்ச்சி. எவ்வித இலாபத்தையும் எதிர்பாராது இலக்கியத் துறையில் புதிய எழுத்தாளர்களும் வேரூன்றி நிற்க வேண்டும் என்று இதழாசிரியர் தன்னலமற்று சிந்திப்பது பாராட்டிற்குரியது. பூங்காவனம் நிதமும் புதிதாக பூக்க வேண்டும். அதற்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்!!!

எம்.எஸ்.எம். சப்ரி - பூவெலிகட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகப்பூங்கா





நூலின் பெயர் - வெந்து தணிந்தது காலம்
நூலின் வகை - சிறுகதை
நூலாசிரியர் - மு. சிவலிங்கம்
பதிப்பகம் - பாக்யா பதிப்பகம்
வெளியீடு - மலைநாட்டு எழுத்தாளர் மன்றம்
விலை - 250 ரூபாய்



நூலின் பெயர் - இரும்புக் கதவுக்குள் இருந்து
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - விவேகானந்தனூர் சதீஸ்
வெளியீடு - கலை இலக்கியக் கழகம்
விலை - 230 ரூபாய்




நூலின் பெயர் - மேலைநாட்டு அழகியல்
நூலின் வகை - அறிவியல்
நூலாசிரியர் - கலாநிதி இ. பிரேம்குமார்
வெளியீடு - குமரன் புத்தக இல்லம்
விலை - 350 ரூபாய்



நூலின் பெயர் - முஸ்லிம்கள் மத்தியில் குடிவழிமுறை
நூலின் வகை - ஆய்வு
நூலாசிரியர் - கலாபூஷணம் எஸ். அப்துல் றாஸிக்
வெளியீடு - சம்மாந்துறை குடிமரைக்காயர் சம்மேளனம்
விலை - 300 ரூபாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூலின் பெயர் - இடம் பெயர்ந்த ஊரில்
இடம் பெயரா நாய்
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - யோ. புரட்சி
வெளியீடு - மலையக வெளியீட்டகம்
விலை - 240 ரூபாய்



நூலின் பெயர் - குருதியில் தோய்ந்த பிரதி
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - விடியல்
வெளியீடு - ஆகாஷ் கிரபிக்ஸ்
விலை - 150 ரூபாய்



நூலின் பெயர் - சிவப்பு டைனோசர்கள்
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - சு. தவச்செல்வன்
வெளியீடு - பெருவிரல்
விலை - 250 ரூபாய்



நூலின் பெயர் - மூங்கில் கூடை
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - கோ. கிசோகுமார்
வெளியீடு - மலையக கல்வி அபிவிருத்தி மன்றம்
விலை - 200 ரூபாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நூலின் பெயர் - என் எல்லா நரம்புகளிலும்
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - ஜே. பிரோஸ்கான்
வெளியீடு - பேனா பப்ளிகேஷன்
விலை - 200 ரூபாய்

நூலின் பெயர் - ஒரு செண்ரி மீட்டர் சிரிப்பு
பத்து செகண்ட் கோபம்
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - ஜே. பிரோஸ்கான்
வெளியீடு - பேனா பப்ளிகேஷன்
விலை - 250 ரூபாய்






நூலின் பெயர் - காவி நரகம்
நூலின் வகை - சிறுகதை
நூலாசிரியர் - ஏ. நஸ்புள்ளாஹ்
வெளியீடு - பேனா பப்ளிகேஷன்
விலை - 400 ரூபாய்




நூலின் பெயர் - கடவுளிடம் சில கேள்விகள்
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - வே. முல்லைத்தீபன்
வெளியீடு - வவுனியா கலை இலக்கிய
நண்பர்கள் வட்டம்
விலை - 240 ரூபாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்காவனம் துணை ஆசிரியர் தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா எழுதி வெளியிட்ட 'திறந்த கதவுள் தெரிந்தவை ஒரு பார்வை' நூல் வெளியீட்டு நிகழ்வின்போது...











நூலின் பெயர் - திறந்த கதவுள் தெரிந்தவை ஒரு பார்வை
நூலின் வகை - விமர்சனங்கள்
நூலாசிரியர் - தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா
வெளியீடு - கொடகே பதிப்பகம்
விலை - 600 ரூபாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நூலின் பெயர் - வண்ணாத்திப் பூச்சி
நூலின் வகை - சிறுவர் பாடல்
நூலாசிரியர் - வெலிகம ரிம்ஸா முஹம்மத்
வெளியீடு - ஸ்பீட்மார்க் பதிப்பகம்
விலை - 200 ரூபாய்




நூலின் பெயர் - நட்சத்திரம்
நூலின் வகை - சிறுவர் பாடல்
நூலாசிரியர் - தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா
வெளியீடு - ஸ்பீட்மார்க் பதிப்பகம்
விலை - 200 ரூபாய்

**With Best Compliments From:-**

FIVE STAR TEXTILES
**FIVE STAR TEXTILES CENTRE**
WHOLESALE & RETAIL TEXTILE DEALERS

No. 95, 2 nd Cross Street, Colombo - 11, Sri Lanka.
Tel :- 011 2441810, 2345280, 2441809
Fax :- 94 - 1 - 2345184 / 2582453
E-mail :- shafecka@sltnet.lk

**With Best Compliments From:-**

**M.S.M. MASHOOR HADJYAR**

**Address** : No. 16, Ediriveera Avenue, Dehiwala, Sri Lanka.
**Mobile** : 077 3235543

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# With Best Compliments From...




Designed By - H.F. Rizna

9772012670007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org